மீகா - முன்னுரை

காலமும் இடமும்

கி.மு. 772 - 722 ஆகிய வருஷங்களில் மீகாவின் புஸ்தகம் பாலஸ்தீன தேசத்தில் எழுதப்பட்டது.

ஆசிரியர்

மீகா தீர்க்கதரிசி (மீகா 1:1).

மையக்கருத்து

1. மீகா யூதாவில் தீர்க்கதரிசியாக இருந்த போதிலும் அவர் சமாரியாவிற்கும், புறஜாதி தேசங்களுக்கும் தீர்க்கதரிசனம் கூறினார்.

2. அவர்கள் எல்லோரையும் அவர்களுடைய பாவங்களின் நிமித்தமாகக் கடிந்து கொண்டார். அவர்கள்மீது நியாயத்தீர்ப்பு வருமென்றும், இஸ்ரவேலின் சிறையிருப்பையும் எச்சரித்துக் கூறினார்.

3. மேசியாவின் ராஜ்யத்தில் இஸ்ரவேல் தேசத்தார் வருங்காலத்தில் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள் என்பதை முன்னறிந்தார்.

4. கடைசி நாட்களில் நடைபெறப் போகும் மகா பெரிய சம்பவங்களை முன்னறிந்தார்.

5. கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தையும், யூதா தேசத்தையும் பலமுறை எச்சரித்திருக்கிறார். அவர்கள் தங்கள் பாவங்களில் தொடர்ந்து ஜீவித்தால், கர்த்தருக்கு விரோதமாகத் தொடர்ந்து கலகம் பண்ணினால் அவர்களுடைய ராஜ்யம் விழுந்துபோகும் என்று தேவன் எச்சரித்திருக்கிறார். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு விரோதமாகத் தொடர்ந்து கலகம் பண்ணினார்கள். தங்களுடைய இருதயத்திலும், ஜீவியத்திலும் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போனார்கள்.

6. அவர்களுடைய மாய்மாலமான ஆராதனையிலும், சடங்குகளிலும், பாவங்களிலும் கர்த்தர் தொடர்ந்து பொறுமையோடு இருக்கவில்லை. ஆகையினால் மோசேயின் உடன்படிக்கையின் பிரகாரம் கர்த்தர் அவர்களை நீதியாய் நியாயம் விசாரிப்பதை அவசியமென்று காண்கிறார்.

7. இஸ்ரவேல் புத்திரரை மனந்திரும்ப வைப்பதற்கான செயல்திட்டம் ஒன்றைக் கர்த்தர் வடிவமைக்கிறார். இதன் மூலமாக அவர் இஸ்ரவேல் புத்திரரோடு செய்து கொண்ட நித்திய உடன்படிக்கைகளை நிறைவேற்ற தீர்மானித்திருக்கிறார்.

முதல் மூன்று அதிகாரங்களில் இஸ்ரவேல் புத்திரருக்கு எதிராகக் கர்த்தருடைய வழக்கு விவரிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நியாயத்தீர்ப்பு வரும். அவர்கள் சிறையிருப்புக்குப் போவார்கள். இஸ்ரவேலில் மீதியாயிருக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப் படுவார்கள்.

மீகா 4-5 ஆகிய அதிகாரங்கள் ஆயிரம் வருஷ அரசாட்சியைப் பற்றிக் குறிப்பிடுகிறது. பாபிலோனிய சிறையிருப்பைப் பற்றியும், இயேசு கிறிஸ்துவின் முதலாவது வருகையைப் பற்றியும், இந்த அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (மீகா 4:9-10; மீகா 5:1-2). ஆனால் கர்த்தரோ இஸ்ரவேல் புத்திரரின் மிகுதியான பாவங்களின் நிமித்தமாக அவர்களைப் புறஜாதி தேசங்களின் மத்தியில் சிதறிப்போவதற்கு அனுமதித்திருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலும் இஸ்ரவேல் புத்திரர் பல தேசங்களில் சிதறிப்போயிருப்பார்கள். (மீகா 5:3) இஸ்ரவேலை மீட்பதற்காக இயேசு கிறிஸ்து வரும்போது அவர் அந்திக்கிறிஸ்துவோடு யுத்தம் பண்ணுவார். (மீகா 5:4-15).

மீகா 6:1-7:6 ஆகிய வசனங்களில் இஸ்ரவேல்மீது கர்த்தருடைய வழக்கு மறுபடியும் கூறப்பட்டிருக்கிறது. மீகா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் கடைசிப் பகுதி கடைசி நாட்களில் நடைபெறும் சம்பவங்களைப் பற்றிக் கூறுகிறது. தேவன் ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கையை நிறைவேற்றுவார். (மீகா 7:7-20).

மீகா - முன்னுரை

மீகா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் தேவனுடைய நோக்கங்கள் அவருடைய கிரியைகளில் விவரிக்கப்பட்டுள்ளன. தம்முடைய நித்திய சித்தத்திற்கும், நித்திய திட்டத்திற்கும் இஸ்ரவேல் புத்திரரையும், மனுபுத்திரர் அனைவரையும் இணங்கச் செய்ய வேண்டுமென்பது கர்த்தருடைய நோக்கம். ஆரம்பத்தில் தேவன் பண்ணிய ஆசீர்வாதங்களின் வாக்குத்தத்தங்கள் இறுதியாகப் பூரணமாக நிறைவேறுகிறது.

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 7

வசனங்கள் - 105

கேள்விகள் - 23

புதிய தீர்க்கதரிசனங்கள் - 10

கட்டளைகள் - 20

வாக்குத்தத்தங்கள் - 2

முன்னறிவிப்புக்கள் - 123

மீகா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் விசேஷித்த செய்திகள். (மீகா 1:2; மீகா 2:1,5,9; மீகா 4:1,6; மீகா 6:1).

பொருளடக்கம்

I. யூதாவிற்கு எதிராகவும் இஸ்ரவேலுக்கு எதிராகவும் தேவனுடைய வழக்கு

1. தலைப்பு, ஆசிரியர், வரலாற்றுப் பின்னணி (1:1)
2. மேசியாவின் இரண்டாம் வருகை (1:2-4)
3. யூதாவின் பாவங்களும் இஸ்ரவேலின் பாவங்களும் (1:5)
4. அசீரியர்கள் இஸ்ரவேலரைச் சிறைப்பிடித்தார்கள் (1:6-7)
5. இஸ்ரவேலுக்காக புலம்பல் (1:8-16)
6. இஸ்ரவேலின் ஏழு பாவங்கள் (2:1-2)
7. இஸ்ரவேலின்மீது நியாயத்தீர்ப்பு (2:3)
8. இஸ்ரவேலுக்காக புலம்பல் (2:4-5)
9. யாக்கோபின் பாவங்களும் நியாயத்தீர்ப்பும் (2:6-11)
10. மேசியாவின் இரண்டாம் வருகை (2:12-13)

II. இஸ்ரவேலை ஆளுபவர்களுக்கு தீர்க்கதரிசனம்

1. அவர்களுடைய எட்டு பாவங்கள் (3:1-3)
2. தேவன் அவர்களைத் தள்ளிவிட்டார் (3:4)
3. தீர்க்கதரிசிகள் மீது நியாயத்தீர்ப்பு (3:5-7)
4. மீகாவும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் (3:8)
5. தலைவர்களின் எட்டு பாவங்கள் (3:9-11)
6. எருசலேம், தேவாலயம் ஆகியவற்றின் முழுமையான அழிவு (3:12)

III. ஆயிர வருஷ மீட்பு

1. மேசியாவினுடைய இராஜ்ஜியத்தின் விஸ்தீரணமும் மேன்மையும் (4:1-2)
2. உலக அமைதி (4:3)
3. உலக செழுமை (4:4)
4. உலக மார்க்கம் (4:5)
5. மேசியாவின்கீழ் நித்திய தேசத்திற்கு இஸ்ரவேலரின் மீட்பு (4:6-8)
6. பாபிலோனியச் சிறையிருப்பு முதலாவது வரும் (4:9-10)
7. இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படும் விதம் (4:11-13)
8. மேசியாவின் முதலாவது வருகையும் அவருடைய மீட்பின் கிரியையும் நித்திய மீட்பிற்கு அச்சாரம் (5:1-2)

மீகா - முன்னுரை

9. இஸ்ரவேல் மனந்திரும்பும் வரையிலும் அது ஒப்புக்கொடுக்கப்படும் (5:3)

10. மேசியாவின் இரண்டாம் வருகையின் போது அந்திக்கிறிஸ்துவிடமிருந்து இஸ்ரவேல் மீட்கப்படும் (5:4-6)

11. மேசியாவின் வருகையின்போது இஸ்ரவேல் மீட்கப்படும் (5:7-15)

IV. இஸ்ரவேலுக்கு எதிராக கர்த்தருடைய கடந்த கால வழக்கும் நிகழ்கால வழக்கும்

1. பர்வதங்கள், மலைகள், ஜனங்கள் ஆகியவற்றிற்கு அழைப்பு (6:1-2)

2. ஜனங்களோடு வழக்கு - பாவங்களும் நியாயத்தீர்ப்பும் (6:3-8)

3. பட்டணத்தோடு வழக்கு - பாவங்களும் நியாயத்தீர்ப்பும் (6:9-16)

4. இஸ்ரவேல் முழுமையாக நீதியிலிருந்து பாழாகும் (7:1-6)

V. இஸ்ரவேலின் மீட்பு

1. கடைசி நாட்களில் இஸ்ரவேலின் மனந்திரும்புதல் (7:7-9)

2. இஸ்ரவேலின் விரோதிகள் தாழ்த்தப்படுவார்கள் (7:10)

3. இஸ்ரவேல் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படும் (7:11-13)

4. தேவனிடம் ஜெபம் (7:14)

5. விரோதிகள் மீது நியாயத்தீர்ப்பு (7:15-17)

6. தேவனிடத்தில் இஸ்ரவேலின் நம்பிக்கை (7:18-20)

மீகா – தொகுப்புரை

1 அதிகாரம்

I. யூதாவிற்கு எதிராகவும் இஸ்ரவேலுக்கு எதிராகவும் தேவனுடைய வழக்கு - (1:1-2:13)

1. தலைப்பு, ஆசிரியர், வரலாற்றுப் பின்னணி - (2இராஜா 15-20; 2நாளா 26-32)

மீகா 1:1 யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்னும் யூதா ராஜாக்களுடைய நாட்களில், மொரேசா ஊரானாகிய மீகாவுக்கு உண்டானதும், அவன் சமாரியாவுக்கும் எருசலேமுக்கும் விரோதமாய்த் தரிசித்ததுமான கர்த்தருடைய வார்த்தை.

"மீகா" (Micah) - இந்தப் பெயருக்குக் "கர்த்தரைப் போன்றவன்" **"who is like Jehovah"** என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் மீகாக்கள்

1. எப்பிராயீமியன் (நியா 17:1-13; நியா 18:2-27)
2. ரூபன் குடும்பத்துத் தலைவன். (1நாளா 5:5)
3. மேவிபோசேத்தின் குமாரன். (1நாளா 8:34-35; 1நாளா 9:40-41). மறுபெயர் "Micha" (2சாமு 9:12)
4. லேவியன் (1நாளா 9:15)
5. மற்றொரு லேவியன் (1நாளா 23:20; 1நாளா 24:24-25)
6. அப்தோனின் தகப்பன் (2நாளா 34:20)
7. சிறிய தீர்க்கதரிசி (எரே 26:18-19; மீகா 1:1,14,15)

"கர்த்தருடைய வார்த்தை" - மீகாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. சிறிய தீர்க்கதரிசிகள் அனைவரும் தங்களுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டானதாக அறிவித்திருக்கிறார்கள். (ஓசி 1:1; யோவே 1:1; ஆமோ 1:1-3; யோனா 1:1; செப் 1:1; ஆகாய் 1:1; சக 1:1). மேலும் சில தீர்க்கதரிசிகள் தரிசனத்தைக் குறித்துக் கூறியிருக்கிறார்கள். (ஒப 1:1; நாகூம் 1:1; ஆப 1:1; மல் 1:1).

"யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்னும் யூதா ராஜாக்களுடைய நாட்களில்" - யூதாவில் ஏசாயா, எப்பிராயீமில் ஆமோஸ், ஓசியா ஆகியோரின் காலத்தில் மீகா தீர்க்கதரிசன ஊழியம் செய்து வந்தார். இது யோதாம், ஆகாஸ், எசேக்கியா ஆகியோரின் காலமாகும். (ஏசா 1:1; ஓசி 1:1; ஆமோ 1:1).

"சமாரியாவுக்கும் எருசலேமுக்கும் விரோதமாய்" - மீகா எப்பிராயீமிற்கும் யூதாவிற்கும், சமாரியாவிற்கும், எருசலேமிற்கும் விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்தார். இவருடைய ஊரின் பெயர் மொரேசா (Mareshah) அல்லது மரேஷா (Moresheth-gath) (மீகா 1:1,15) இது யூதாவிற்கும், பெலிஸ்தியாவிற்கும் நடுவிலுள்ளது.

2. மேசியாவின் இரண்டாம் வருகை

மீகா 1:2 சகல ஜனங்களே, கேளுங்கள்; பூமியே, அதிலுள்ளவைகளே, செவி கொடுங்கள், கர்த்தராகிய ஆண்டவர், தம்முடைய பரிசுத்த ஆலயத்திலிருக்கிற ஆண்டவரே உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருப்பார்.

மீகா 1:3 இதோ, கர்த்தர் தமது ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருகிறார்; அவர் இறங்கி பூமியின் உயர்ந்த இடங்களை மிதிப்பார்.

மீகா 1:4 மெழுகு அக்கினிக்கு முன்பாக உருகுகிறதுபோலவும், மலைகளிலிருந்து பாயுந் தண்ணீர் தரையைப் பிளக்கிறது போலவும், பர்வதங்கள் அவர் கீழே உருகி, பள்ளத்தாக்குகள் பிளந்துபோகும்.

மீகா – தொகுப்புரை

1 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 1

"சகல ஜனங்களே, கேளுங்கள்; பூமியே, அதிலுள்ளவைகளே, செவிகொடுங்கள்......" (மீகா 1:2-4) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. கர்த்தர் தமது ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருவார். (மீகா 1:3).
2. அவர் இறங்கி பூமியின் உயர்ந்த இடங்களை மிதிப்பார்.
3. பர்வதங்கள் அவர் கீழே உருகி, பள்ளத்தாக்குகள் பிளந்துபோகும். (மீகா 1:4; சக 14:4).

மீகா புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. சகல ஜனங்களே, கேளுங்கள் (மீகா 1:2)
2. பூமியே, அதிலுள்ளவைகளே, செவி கொடுங்கள்.
3. அதைக் காத் பட்டணத்திலே அறிவியாதேயுங்கள் (மீகா 1:10).
4. அழவே வேண்டாம்.
5. பெத்அப்ராவிலே புழுதியில் புரளு.
6. சாப்பீரில் குடியிருக்கிறவளே, வெட்கத்துடன் அம்மணமாய் அப்பாலே போ (மீகா 1:11).
7. லாகீசில் குடியிருக்கிறவளே, வேகமானகுதிரைகளை இரதத்திலே பூட்டு (மீகா 1:13).
8. உன் தலையைச் சிரைத்துக் கொள். (மீகா 1:16).
9. உனக்கு அருமையான உன் பிள்ளைகளினிமித்தம்மொட்டையிட்டுக் கொள்
10. கழுகைப்போல முழுமொட்டையாயிரு.
11. எழுந்திருந்து போங்கள் (மீகா 2:10).
12. யாக்கோபின் தலைவர்களே கேளுங்கள். (மீகா 3:1,9).
13. சீயோன் குமாரத்தியே, நீ எழுந்து போரடி (மீகா 4:13).
14. சேனைகளையுடைய நகரமே, இப்போது தண்டுதண்டாகக் கூடிக்கொள் (மீகா 5:1).
15. கர்த்தர் சொல்லுகிறதைக் கேளுங்கள் (மீகா 6:1).
16. நீ எழுந்து, பர்வதங்களுக்குமுன் உன் வழக்கைச் சொல்.
17. மலைகள் உன் சத்தத்தைக் கேட்கக் கடவது.
18. பர்வதங்களே, பூமியின் உறுதியான அஸ்திபாரங்களே, கர்த்தருடைய வழக்கைக் கேளுங்கள் (மீகா 6:2).
19. என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்தோஷப்படாதே (மீகா 7:8).
20. உம்முடைய ஜனத்தை உமது கோலினால் மேய்த்தருளும் (மீகா 7:14).

3. யூதாவின் பாவங்களும் இஸ்ரவேலின் பாவங்களும்

மீகா 1:5 இது எல்லாம் யாக்கோபுடைய மீறுதலினிமித்தமும், இஸ்ரவேல் வம்சத்தாருடைய பாவங்களினிமித்தமும் சம்பவிக்கும்; யாக்கோபின் மீறுதலுக்குக் காரணமென்ன? சமாரியா அல்லவோ? யூதாவின் மேடைகளுக்குக் காரணமென்ன? எருசலேம் அல்லவோ?

"இஸ்ரவேல் வம்சத்தாருடைய பாவங்கள்" - விக்கிரகாராதனை ஸ்தலங்களைப் பெருக்கியது இவர்களுடைய முக்கியமான பாவமாகும். (மீகா 1:3).

மீகா – தொகுப்புரை

1 அதிகாரம்

4. அசீரியர்கள் இஸ்ரவேல்லரைச் சிறைப் பிடித்தார்கள் - (2 இராஜா 17)

மீகா 1:6 ஆகையால் நான் சமாரியாவை வெளியான மண்மேடும், திராட்சச்செடி நடுகிற நிலமுமாக்கி, அதின் கற்களைப் பள்ளத்தாக்கிலே புரண்டு விழப்பண்ணி, அதின் அஸ்திபாரங்களைத் திறந்து வைப்பேன்.

மீகா 1:7 அதின் சுரூபங்கள் எல்லாம் நொறுக்கப்படும்; அதின் பணையங்கள் எல்லாம் அக்கினியால் எரித்துப்போடப் படும்; அதின் விக்கிரகங்களை எல்லாம் பாழாக்குவேன்; வேசிப் பணையத்தினால் சேர்க்கப்பட்டது, திரும்ப வேசிப்பணையமாய்ப் போகும்.

தீர்க்கதரிசன எண் - 2

“ஆகையால் நான் சமாரியாவை வெளியான மண்மேடும், திராட்சச்செடி நடுகிற நிலமுமாக்கி.....” (மீகா 1:6-16) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. நான் சமாரியாவை வெளியான மண்மேடாக்குவேன். (மீகா 1:6).
2. அதின் கற்களைப் பள்ளத்தாக்கிலே புரண்டு விழப்பண்ணுவேன்.
3. அதின் அஸ்திபாரங்களைத் திறந்து வைப்பேன்.
4. அதின் சுரூபங்கள் எல்லாம் நொறுக்கப்படும் (மீகா 1:7).
5. அதின் பணையங்கள் எல்லாம் அக்கினியால் எரித்துப்போடப்படும்.
6. அதின் விக்கிரகங்களை எல்லாம் பாழாக்குவேன்.
7. வேசிப்பணையத்தினால்சேர்க்கப்பட்டது, திரும்ப வேசிப்பணையமாய்ப் போகும்.
8. நான் புலம்பி அலறுவேன் (மீகா 1:8)
9. பறி கொடுத்தவனாகவும் அம்மணமாகவும் நடப்பேன்.
10. நான் ஓரிகளைப் போலஊளையிட்டு, ஆந்தைகளைப்போல அலறுவேன்.
11. என் ஜனத்தின் வாசலாகிய எருசலேம் மட்டும் (அசீரியர்) வந்தெட்டுவார்கள். (மீகா 1:9)
12. சாயனானில் குடியிருக்கிறவள் வெளியே வருவதில்லை (மீகா 1:11)
13. மோர்ஷேக்காத்தினிடத்தில் உனக்கு இருக்கிறதைக் கொடுத்துவிடுவாய் (மீகா1:14)
14. அக்சீபின் வீடுகள் இஸ்ரவேலின் ராஜாக்களுக்கு அபத்தமாய்ப்போகும்.
15. மரேஷாவில் குடியிருக்கிறவளே, உனக்கு இன்னும் ஒரு சுதந்தரவாளியை வரப் பண்ணுவேன் (மீகா 1:15)
16. அவன் இஸ்ரவேலின் மகிமையாகிய அதுல்லாம்மட்டும் வருவான்.
17. நீ சிறைப்பட்டுப் போவாய். (மீகா 1:16)

“வேசிப்பணையம்” - விக்கிரகாராதனையில் வேசித்தனத்தின் மூலமாகப் பொருளைச் சேர்த்தார்கள். வேசிப்பணையத்தைச் சேகரிப்பதற்குப் பல ஸ்திரீகளைப் பயன் படுத்தினார்கள். வேசித்தனம் விக்கிரகாராதனையின் ஒரு பகுதியாக இருந்தது.

5. இஸ்ரவேலுக்காக புலம்பல்

மீகா 1:8 இதினிமித்தம் நான் புலம்பி அலறுவேன்; பறிகொடுத்தவனாகவும் அம்மணமாகவும் நடப்பேன்; நான் ஓரிகளைப் போலஊளையிட்டு, ஆந்தைகளைப்போல அலறுவேன்.

மீகா – தொகுப்புரை

1 அதிகாரம்

மீகா 1:9 அதின் காயம் ஆறாதது; அது யூதா மட்டும் வந்தது; என் ஜனத்தின் வாசலாகிய எருசலேம்மட்டும் வந்தெட்டினது.

மீகா 1:10 அதைக் காத்பட்டணத்திலே அறிவியாதேயுங்கள், அழவே வேண்டாம்; பெத்அப்ராவிலே புழுதியில் புரளு.

மீகா 1:11 சாப்பீரில் குடியிருக்கிறவளே, வெட்கத்துடன் அம்மணமாய் அப்பாலே போ; சாயனானில் குடியிருக்கிறவள் வெளியே வருவதில்லை;பெத்ஏசேலின் புலம்பல் உங்களுக்கு அடைக்கலமாயிராது.

மீகா 1:12 மாரோத்தில் குடியிருக்கிறவள் நன்மை வருமென்று எதிர்பார்த்திருந்தாள்; ஆனாலும் தீமை கர்த்தரிடத்திலிருந்து எருசலேமில் வாசல்வரைக்கும் வந்தது.

மீகா 1:13 லாகீசில் குடியிருக்கிறவளே, வேகமானகுதிரைகளை இரதத்திலே பூட்டு; நீயே சீயோன் குமாரத்தியின் பாவத்துக்குக் காரணி; உன்னிடத்தில் இஸ்ரவேலின் பாதகங்கள் காணப்பட்டது.

மீகா 1:14 ஆகையால் மோர்ஷேக்காத்தினிடத்தில் உனக்கு இருக்கிறதைக் கொடுத்துவிடுவாய்; அக்சீபின் வீடுகள் இஸ்ரவேலின் ராஜாக்களுக்கு அபத்தமாய்ப்போகும்.

மீகா 1:15 மரேஷாவில் குடியிருக்கிறவளே, உனக்கு இன்னும் ஒரு சுதந்தரவாளியை வரப் பண்ணுவேன்; அவன் இஸ்ரவேலின் மகிமையாகிய அதுல்லாம் மட்டும் வருவான்.

மீகா 1:16 உனக்கு அருமையான உன் பிள்ளைகளினிமித்தம் நீ உன் தலையைச் சிரைத்து மொட்டையிட்டுக் கொள்; கழுகைப்போல முழுமொட்டையாயிரு, அவர்கள் உன்னைவிட்டுச் சிறைப்பட்டுப் போகிறார்கள்.

"நான் புலம்பி அலறுவேன்" - யூதா, எருசலேம் ஆகியவற்றின்மீது யுத்தம் பண்ண வரும் சத்துருக்களுக்காகவும், யூதா எருசலேம் ஆகியவற்றின் அழிவிற்காகவும் தீர்க்கதரிசி புலம்பி அழுகிறார். (மீகா 1:8-16).

"அதின் காயம் ஆறாதது" - யூதாவின் அழிவை யாராலும் தடுக்க முடியாது. யூதாவில் அக்கிரமம் திரளாய் இருக்கிறது.

"என் ஜனத்தின் வாசலாகிய எருசலேம் மட்டும் வந்தெட்டினது" - அசீரியர்கள் எப்பிராயீம் தேசத்தை அழித்தார்கள். அதன் பின்பு அவர்கள் எருசலேமிற்கு விரோதமாக வந்தார்கள். ஆனால் அவர்களால் எருசலேமைப் பிடிக்க முடியவில்லை. தேவதூதன் ஒருவன் அசீரியரின் சேனையை அழித்தான். (2இராஜா 17-19; ஏசா 36-38).

"வெட்கத்துடன் அம்மணமாய்" - எருசலேமிற்கு வெளியிலும், பெலிஸ்தியாவிலும் அசீரியர் பல பகுதிகளைக் கைப்பற்றி அங்குள்ளவர்களைத் தங்களுடைய சிறையிருப்புக்கு உட்படுத்தினார்கள். தங்கள் கைகளில் கிடைக்கிறவர்களை அசீரியர் பயங்கரமாய் அழித்துப் போடுவார்கள் என்பதை இந்த வாக்கியம் விளக்குகிறது. (மீகா 1:11-16)

"அப்பாலே போ" - இந்த வாக்கியத்திற்கு "சிறையிருப்புக்குப்போ" **"go into exile"** என்று பொருள்.

"தீமை கர்த்தரிடத்திலிருந்து ....வந்தது" - கர்த்தர் தீமை செய்கிறவர் அல்ல. ஆனாலும் எருசலேமின் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணுகிறார்கள். கர்த்தர் அசீரியரைச் சிட்சிக்கும் கோலாகப் பயன்படுத்துகிறார். எந்தெந்த தேசங்களெல்லாம் தண்டனைக்குட்பட வேண்டுமோ அந்தத் தேசங்களைக் கர்த்தர் அசீரியர் மூலமாகச் சிட்சிக்கிறார். (ஏசா 10:5-19; ஏசா 36-37)

"எருசலேமில் வாசல்வரைக்கும் வந்தது" - அசீரியர் எருசலேமின் அலங்கங்களின் வாசல் வரைக்கும் வந்துவிட்டார்கள். ஆனால் அவர்களால் எருசலேமிற்குள் வரமுடியவில்லை. தெய்வீக வல்லமையினால் அசீரியர் தடுத்து நிறுத்தப்படுகிறார்கள். (ஏசா 36-37).

மீகா – தொகுப்புரை

1 அதிகாரம்

"சீயோன் குமாரத்தியின் பாவத்துக்குக் காரணி" - யூதாவின் அரணான பட்டணங்களில் லாகீசும் ஒன்று. அசீரியர் எருசலேமைப் பிடிப்பதற்கு முன்பாக யூதாவின் பட்டணங்களையெல்லாம் பிடித்தார்கள். அவர்கள் லாகீசையும் பிடித்தார்கள். "சீயோன் குமாரத்தியின் பாவத்துக்குக் காரணி"யாக லாகீஸ் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இது என்ன பொருளில் கூறப்பட்டிருக்கிறது என்பது தெரியவில்லை. பத்துக் கோத்திரத்தாரின் பாவங்களுக்கும் லாகீஸ் காரணமாக இருந்தது. இஸ்ரவேலின் பாதகங்கள் லாகீசிலும் காணப்படுகிறது.

"சுதந்தரவாளி" - இந்த வார்த்தை சனகெரிபைக் (Sennacherib) குறிக்கும். மரேஷாவின் ஜனங்களை ஆளுவதற்குக் கர்த்தர் சனகெரிபைச் சுதந்தரவாளியாக நியமிக்கிறார்.

"நீ உன் தலையைச் சிரைத்து மொட்டையிட்டுக்கொள்" - துக்கத்தின்போது தலையை மொட்டையிட்டுக் கொள்வது பிரமாணத்தின் படி தடை பண்ணப்பட்டிருக்கிறது. (உபா 14:1) ஆனால் யூதாவோ புறஜாதியாரைப் போல மாறிவிட்டார்கள். ஆகையினால் அவர்கள் புறஜாதியாரைப் போலவே துக்கங் கொண்டாடுவார்கள்.

மீகா - தொகுப்புரை

2 அதிகாரம்

6. இஸ்ரவேலின் ஏழு பாவங்கள்

மீகா 2:1 அக்கிரமத்தை யோசித்து, தங்கள் படுக்கைகளின்மேல் பொல்லாப்பு செய்ய எத்தனம்பண்ணித் தங்கள் கையில் வல்லமை இருக்கிறபடியினால், விடியற் காலமாகிறபோது அதை நடப்பித்து,

மீகா 2:2 வயல்களை இச்சித்துப் பறித்துக்கொண்டு, வீடுகளை இச்சித்து எடுத்துக்கொண்டு, புருஷனையும் அவன் வீட்டையும், மனுஷனையும் அவன் சுதந்தரத்தையும் ஒடுக்கிறவர்களுக்கு ஐயோ!

இஸ்ரவேலின் பாவங்கள்

1. அக்கிரமத்தை யோசிக்கிறார்கள். (மீகா 2:1)
2. தங்கள் படுக்கைகளின்மேல் பொல்லாப்பு செய்ய எத்தனம் பண்ணுகிறார்கள்.
3. தங்கள் கையில் வல்லமை இருக்கிற படியினால், விடியற்காலமாகிறபோது அதை நடப்பிக்கிறார்கள்.
4. வயல்களை இச்சிக்கிறார்கள். (மீகா 2:2)
5. வயல்களைப் பறித்துக்கொள்கிறார்கள்.
6. வீடுகளை இச்சித்து எடுத்துக் கொள்கிறார்கள்.
7. புருஷனையும் அவன் வீட்டையும் ஒடுக்குகிறார்கள்.
8. மனுஷனையும் அவன் சுதந்தரத்தையும் ஒடுக்குகிறார்கள்.

7. இஸ்ரவேலின்மீது நியாயத்தீர்ப்பு

மீகா 2:3 ஆகையால் கர்த்தர்: நான் இந்த வம்சத்தாருக்கு விரோதமாய்த் தீமையை வருவிக்க நினைக்கிறேன்; அதினின்று நீங்கள் கழுத்தை நீக்க மாட்டீர்கள்; நீங்கள் மேட்டிமையாய் நடப்பதில்லை; அது தீமையான காலம்.

தீர்க்கதரிசன எண் - 3

"ஆகையால் கர்த்தர்: நான் இந்த வம்சத்தாருக்கு விரோதமாய்த் தீமையை வருவிக்க நினைக்கிறேன்......" (மீகா 2:3-6) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. நான் இந்த வம்சத்தாருக்கு (இஸ்ரவேல்) விரோதமாய்த் தீமையை வருவிக்க நினைக்கிறேன்; அதினின்று நீங்கள் கழுத்தை நீக்க மாட்டீர்கள் (மீகா 2:3).
2. நீங்கள் மேட்டிமையாய் நடப்பதில்லை; அது தீமையான காலம்.
3. அந்நாளில் உங்கள்பேரில் ஒப்புச் சொல்லுவார்கள். (மீகா 2:4).
4. நாம் முற்றிலும் பாழானோம் என்று புலம்புவீர்கள்.
5. நமது ஜனத்தின் சுதந்தரத்தை மாற்றிப் போட்டார் என்று கூறுவீர்கள்.
6. சுதந்தரத்தை என்னைவிட்டு நீக்கிப் போட்டார் என்று புலம்புவீர்கள்.
7. நமது வயல்களைப் பிடுங்கிப் பகிர்ந்து கொடுத்தார் என்று துயரமான புலம்பலாய்ப் புலம்புவீர்கள்.
8. கர்த்தரின் சபையில் சுதந்தரவீதங்களை அளந்து கொடுக்கிறவர்கள் உனக்கு இல்லாதிருப்பார்கள். (மீகா 2:5).
9. அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லாதிருப்பார்கள். (மீகா 2:6)

மீகா – தொகுப்புரை

2 அதிகாரம்

8. இஸ்ரவேலுக்காக புலம்பல்

மீகா 2:4 அந்நாளில் உங்கள்பேரில் ஒப்புச் சொல்லி, நாம் முற்றிலும் பாழானோம்; நமது ஜனத்தின் சுதந்தரத்தை மாற்றிப் போட்டார்; என்னமாய் அதை என்னைவிட்டு நீக்கிப்போட்டார்! நமது வயல்களைப் பிடுங்கிப் பகிர்ந்து கொடுத்தாரே என்று துயரமான புலம்பலாய்ப் புலம்புவார்கள்.

மீகா 2:5 கர்த்தரின் சபையில் சுதந்தர வீதங்களை அளந்துகொடுக்கிறவர்கள் உனக்கு இல்லாதிருப்பார்கள்.

"கர்த்தரின் சபையில் சுதந்தரவீதங்களை அளந்துகொடுக்கிறவர்கள்" - ஊரிலுள்ள நிலங்களெல்லாம் ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் சீட்டுப்போட்டு பங்கு பிரித்துக் கொடுக்கப்படும்.

9. யாக்கோபின் பாவங்களும் நியாயத் தீர்ப்பும்

மீகா 2:6 தீர்க்கதரிசனஞ் சொல்லாதிருப்பீர்களாகஎன்கிறார்கள்; அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள், இந்தப்பிரகாரமாய் அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லா விட்டால் நிந்தை நீங்காதே.

மீகா 2:7 யாக்கோபு வம்சம் என்று பேர் பெற்றவர்களே, கர்த்தரின் ஆவி குறுகியிருக்கிறதோ? அவருடைய கிரியைகள் இவைகள்தானோ? செம்மையாய் நடக்கிறவனுக்கு என் வார்த்தைகள் நன்மைசெய்யாதோ?

மீகா 2:8 என் ஜனங்கள் பூர்வமுதல் சத்துருவைப்போல் எழும்பினார்கள். யுத்தத்திலிருந்து திரும்பிவந்து வழியில் அஞ்சாமல் கடந்து போகிறவர்களுடைய மேலங்கியையும் வஸ்திரத்தையும் உரிந்துகொண்டீர்கள்.

மீகா 2:9 என் ஜனத்தின் ஸ்திரீகளை அவர்களுடைய சௌக்கியமான வீடுகளிலிருந்து துரத்திவிட்டீர்கள்; அவர்களுடைய குழந்தைகளுக்கு இருந்த என் அலங்காரத்தை என்றைக்கும் இல்லாதபடிக்குப் பறித்துக்கொண்டீர்கள்.

மீகா 2:10 எழுந்திருந்து போங்கள்; இது நீங்கள் இளைப்பாறும் இடம் அல்ல, இது தீட்டுப்பட்டது, இது உங்களை நாசப்படுத்தும், அந்த நாசம் மிகவும் கொடியதாயிருக்கும்.

மீகா 2:11 மனம்போகிற போக்கின்படி போய், அபத்தமானதை உரைக்கிற ஒருவன், திராட்சரசத்தையும் மதுபானத்தையுங் குறித்து நான் உனக்குப் பிரசங்கிப்பேனென்றால், அவனே இந்த ஜனத்திற்கு ஏற்ற பிரசங்கியாயிருப்பான்.

"தீர்க்கதரிசனஞ் சொல்லாதிருப்பீர்களாக" - ஜனங்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் மீகாவைத் தீர்க்கதரிசனம் சொல்ல வேண்டாமென்று தடை பண்ணியிருக்கிறார்கள். இதனால் ஏற்படும் விளைவுகளைக் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்னெச்சரிக்கிறார்.

"என் வார்த்தைகள் நன்மைசெய்யாதோ?" - செம்மையாய் நடக்கிறவர்களுக்குக் கர்த்தருடைய வார்த்தைகள் நன்மை செய்யும். பாவம் செய்கிறவர்களுக்குக் கர்த்தருடைய வார்த்தை ஆக்கினையைத் தரும்.

செம்மையாய் நடக்கிறவர்களுக்கு ஆசீர்வாதங்கள்

1. இரட்சிப்பு (சங் 7:10; நீதி 28:18)
2. தேவனுடைய பிரசன்னத்தில் ஜீவிப்பது. (சங் 11:7)
3. தேவனுடைய கூடாரத்தில் தங்கியிருப்பது. (சங் 15:2)
4. சகல நன்மைகள் (சங் 84:11)
5. கேடகம் (நீதி 2:7)
6. பத்திரமாய் நடப்பது (நீதி 10:9)
7. நன்மை (மீகா 2:7)

மீகா - தொகுப்புரை

2 அதிகாரம்

"என் ஜனங்கள் பூர்வமுதல் சத்துருவைப் போல் எழும்பினார்கள்" - யாக்கோபிற்கு 12 குமாரர்கள் இருந்த காலத்திலிருந்து இன்று வரையிலும் இஸ்ரவேல் புத்திரர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து கொண்டு வருகிறார்கள். இப்போதும் அவர்கள் கர்த்தருக்குச் சத்துருவாக இருக்கிறார்கள். அவருடைய சிநேகிதராக இல்லை. அவர்கள் தொடர்ந்து பாவம் செய்வதினால் நன்மையை வெறுக்கிறார்கள். கர்த்தருடைய சத்துருக்களாக இருக்கிறார்கள்.

இஸ்ரவேலின் பாவங்கள்

1. தேவனுக்கு எதிராகச் சத்துருவைப்போல் எழும்பினார்கள் (மீகா 2:8).
2. ஜனங்களுடைய மேலங்கியையும் வஸ்திரத்தையும் உரிந்து கொண்டார்கள்.
3. ஸ்திரீகளை அவர்களுடைய சௌக்கியமான வீடுகளிலிருந்து துரத்தி விட்டார்கள். (மீகா 2:9).
4. அவர்களுடைய குழந்தைகளுக்கு இருந்த கர்த்தருடைய அலங்காரத்தை என்றைக்கும் இல்லாதபடிக்குப் பறித்துக்கொண்டார்கள்.
5. மனம்போகிற போக்கின்படி போய், அபத்தமானதைத் தீர்க்கதரிசனமாக உரைக்கிறார்கள். (மீகா 2:11).

தீர்க்கதரிசன எண் - 4

"எழுந்திருந்து போங்கள்; இது நீங்கள் இளைப்பாறும் இடம் அல்ல, இது தீட்டுப்பட்டது......." (மீகா 2:10-13) மீகா 2:10 ஆவது வசனம் நிறைவேறிற்று. மீகா 2:12-13 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்பு

1. இது உங்களை நாசப்படுத்தும், அந்த நாசம் மிகவும் கொடியதாயிருக்கும். (மீகா 2:10)

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. யாக்கோபின் ஜனங்களே, உங்களெல்லாரையும் நான் நிச்சயமாய்க் கூட்டுவேன் (மீகா 2:12).
2. இஸ்ரவேலில் மீதியானவர்களை நிச்சயமாய்ச் சேர்ப்பேன்.
3. போஸ்றாவின் ஆடுகளைப்போல் அவர்களை ஏகக்கூட்டமாக்குவேன்.
4. தன் தொழுவத்துக்குள்ளே சேர்ந்த மந்தைக்குச் சமானமாய் ஜனத் திரளினாலே இரைச்சல் உண்டாகும்.
5. தடைகளை நீக்கிப்போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்துபோகிறார் (மீகா 2:13).
6. அவர்கள் தடைகளை நீக்கி, வாசலால் உட்பிரவேசித்துக் கடந்துபோவார்கள்.
7. அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாகப் போவார், கர்த்தர் அவர்கள் முன்னணியில் நடந்துபோவார்.

"மனம்போகிற போக்கின்படி போய்" - இந்த வாக்கியம் பொய்யின் ஆவியையும், வஞ்சிக்கும் ஆவியையும் குறிப்பிடுகிறது. இது பரிசுத்த ஆவியைக் குறிக்கவில்லை. (மீகா 2:11). மற்ற தீர்க்கதரிசிகளும் கள்ளத்தீர்க்கதரிசிகளைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். (எரே 14:14, எசே 13:3) மெய்யான தீர்க்கதரிசி பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட வேண்டும். ஆனால் கள்ளத் தீர்க்கதரிசிகளோ தங்களுடைய சொந்த ஆவியில் நடக்கிறார்கள். பிசாசுகளால் வழிநடத்தப்பட்டு, பொய்யை முன்னறிவிக்கிறார்கள். இவர்கள் ஜனங்களுக்கு நன்மையான காரியங்களை மட்டுமே கூறுவார்கள். ஜனங்களுடைய பாவங்களைக் கண்டித்தும் உணர்த்தமாட்டார்கள். இதனால் ஜனங்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளை விரும்புகிறார்கள்.

2 அதிகாரம்

10. மேசியாவின் இரண்டாம் வருகை

மீகா 2:12 யாக்கோபின் ஜனங்களே, உங்களெல்லாரையும் நான் நிச்சயமாய்க் கூட்டுவேன், இஸ்ரவேலில் மீதியானவர்களை நிச்சயமாய்ச் சேர்ப்பேன்; போஸ்றாவின் ஆடுகளைப் போல் அவர்களை ஏகக்கூட்டமாக்குவேன், தன் தொழுவத்துக்குள்ளே சேர்ந்த மந்தைக்குச் சமானமாய் ஜனத்திரளினாலே இரைச்சல் உண்டாகும்.

மீகா 2:13 தடைகளை நீக்கிப்போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்துபோகிறார்; அவர்கள் தடைகளை நீக்கி, வாசலால் உட்பிரவேசித்துக் கடந்துபோவார்கள்; அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாகப் போவார், கர்த்தர் அவர்கள் முன்னணியில் நடந்துபோவார்.

"யாக்கோபின் ஜனங்களே, உங்களெல்லாரையும் நான் நிச்சயமாய்க் கூட்டுவேன்" - கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது தேசங்கள் மத்தியில் சிதறிப்போயிருக்கும் இஸ்ரவேல் புத்திரர் திரும்பவும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். "உங்களெல்லாரையும்" என்று கூறப் பட்டிருப்பதினால் இஸ்ரவேலில் எல்லாக் கோத்திரத்தாரும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள் என்று பொருள்கூற வேண்டும். அவர்கள் மறுபடியும் ஒரே தேசமாக ஸ்தாபிக்கப்படுவார்கள்.

"தடைகளை நீக்கிப்போடுகிறவர்" - இந்த வாக்கியம் மூலபாஷையில் "உடைப்பை உண்டுபண்ணுகிறவன்" "the one making a breach" என்று பொருள்படுமாறு உள்ளது. இது அந்திக்கிறிஸ்துவைக் குறிக்கும் வாக்கியமாகும். இந்தச் சம்பவங்களெல்லாம் நிறைவேறும்போது அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலின் எல்லா ஜனத்தையும் அழிக்க முயற்சி பண்ணுவான். அவன் பாலஸ்தீன தேசத்தைப் பிடிப்பான். எருசலேமையும் பிடிப்பான். வருங்காலத்தில் கட்டப்படப் போகும் யூதருடைய தேவாலயத்தைத் தன்னுடைய தலைநகரமாக்குவான். 42 மாதங்களுக்கு ஆட்சி புரிவான். இயேசு கிறிஸ்து தம்முடைய இரண்டாம் வருகையின்போது அந்திக்கிறிஸ்துவை ஜெயிப்பார். (ஏசா 63:1-6; தானி 9:27; தானி 11:40-45; சக 14:1-5; மத் 24:15; 2தெச 2:3-4,8-12; யூதா 1:14-15; வெளி 11:15; வெளி 19:11-21).

"அவர்கள் தடைகளை நீக்கி, வாசலால் உட்பிரவேசித்துக் கடந்துபோவார்கள்" - அந்திக்கிறிஸ்து தடைகளை நீக்கி, இஸ்ரவேல் புத்திரரை அழிப்பதற்காக எருசலேமிற்குள் வருவான். எருசலேமின் பாதிப்பகுதியைப் பிடித்துக் கொள்வான். அப்போது யூதர்களுடைய ராஜாவாகிய மேசியா வருவார். தடைகளை நீக்கிப்போடுகிறவனாகிய அந்திக்கிறிஸ்துவின் மீது யுத்தம் பண்ணி அவனை ஜெயிப்பார். அதன் பின்பு, யாக்கோபின் வம்சத்தாரை நித்திய காலமாக ஆளுகை செய்வார். அவருடைய ராஜ்யத்திற்கு முடிவிராது. (சக 14:1-5,14; லூக்கா 1:32-33; 2தெச 1:7-10; 2தெச 2:8-12; யூதா 1:14-15; வெளி 11:15; வெளி 19:11-21; வெளி 20:1-10).

3 அதிகாரம்

II. இஸ்ரவேலை ஆளுபவர்களுக்கு தீர்க்கதரிசனம்

1. அவர்களுடைய எட்டு பாவங்கள்

மீகா 3:1 நான் சொன்னது: யாக்கோபின் தலைவர்களே, இஸ்ரவேல் வம்சத்து அதிபதிகளே, நியாயம் இன்னதென்று அறிவது உங்களுக்கு அல்லவோ அடுத்தது.

மீகா 3:2 ஆனாலும் நன்மையை வெறுத்து, தீமையை விரும்பி, அவர்கள் மேல் இருக்கிற அவர்களுடைய தோலையும் அவர்கள் எலும்புகள்மேல் இருக்கிற அவர்களுடைய சதையையும் பிடுங்கி,

மீகா 3:3 என் ஜனத்தின் சதையைத் தின்று, அவர்கள் மேல் இருக்கிற அவர்களுடைய தோலை உரிந்துகொண்டு, அவர்கள் எலும்புகளை முறித்து, பானையிலே போடும் வண்ணமாகவும் இறைச்சியைக் கொப்பரைக்குள்ளே போடும் வண்ணமாகவும் அவைகளைத் துண்டிக்கிறார்கள்.

இஸ்ரவேலின் பாவங்கள்

1. நன்மையை வெறுக்கிறார்கள். (மீகா 3:2).
2. தீமையை விரும்புகிறார்கள்.
3. அவர்களுடைய தலைவர்கள் அவர்கள் மேல் இருக்கிற அவர்களுடைய தோலைப் பிடுங்குகிறார்கள்.
4. அவர்கள் எலும்புகள்மேல் இருக்கிற அவர்களுடைய சதையைப் பிடுங்குகிறார்கள்.
5. தேவனுடைய ஜனத்தின் சதையைத் தின்கிறார்கள். (மீகா 3:3).
6. அவர்கள் மேல் இருக்கிற அவர்களுடைய தோலை உரிந்துகொள்கிறார்கள்.
7. அவர்கள் எலும்புகளை முறிக்கிறார்கள்.
8. பானையிலே போடும்வண்ணமாகவும் இறைச்சியைக் கொப்பரைக்குள்ளே போடும் வண்ணமாகவும் அவைகளைத் துண்டிக்கிறார்கள்.
9. அவர்கள் தங்கள் கிரியைகளில் பொல்லாதவர்களாக இருக்கிறார்கள். (மீகா 3:4).
10. தீர்க்கதரிசிகள் தேவனுடைய ஜனத்தை மோசம் போக்குகிறார்கள். (மீகா 3:5).
11. தங்கள் பற்களினால் கடிக்கிறார்கள்.
12. சமாதானமென்று சொல்லி, தங்கள் வாய்க்கு உணவைக் கொடாதவனுக்கு விரோதமாகச் சண்டைக்கு ஆயத்தம் பண்ணுகிறார்கள்.
13. நியாயத்தை அருவருக்கிறார்கள். (மீகா 3:9).
14. செம்மையானவைகளை எல்லாம் கோணலாக்குகிறார்கள்.
15. கொலைபண்ணுகிறார்கள். (மீகா 3:10).
16. அநியாயம் பண்ணுகிறார்கள்.
17. தலைவர்கள் பரிதானத்துக்கு நியாயந் தீர்க்கிறார்கள். (மீகா 3:11).
18. ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசிக்கிறார்கள்.
19. தீர்க்கதரிசிகள் பணத்துக்குக் குறிசொல்லுகிறார்கள்.
20. கர்த்தருடைய பிரசன்னத்தைக் குறித்து பொய்பேசுகிறார்கள்.
21. தீங்கு எங்கள்மேல் வராது என்று பொய்கூறுகிறார்கள்.

மீகா - தொகுப்புரை

3 அதிகாரம்

2. தேவன் அவர்களைத் தள்ளிவிட்டார்

மீகா 3:4 அப்பொழுது அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவார்கள்; ஆனாலும் அவர்கள் தங்கள் கிரியைகளில் பொல்லாதவர்களானபடியினால், அவர் அவர்களுக்கு மறுஉத்தரவு கொடாமல், தமது முகத்தை அக்காலத்திலே அவர்களுக்கு மறைத்துக்கொள்ளுவார்.

3. தீர்க்கதரிசிகள்மீது நியாயத்தீர்ப்பு

மீகா 3:5 தங்கள் பற்களினால் கடிக்கிறவர்களாயிருந்து, சமாதானமென்று சொல்லி, தங்கள் வாய்க்கு உணவைக் கொடாதவனுக்கு விரோதமாகச் சண்டைக்கு ஆயத்தம் பண்ணி, என் ஜனத்தை மோசம்போக்குகிற தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாய்க் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்:

மீகா 3:6 தரிசனங்காணக்கூடாத இராத்திரியும், குறிசொல்லக்கூடாத அந்தகாரமும் உங்களுக்கு வரும்; தீர்க்கதரிசிகளின்மேல் சூரியன் அஸ்தமித்து, அவர்கள்மேல் பகல் காரிருளாய்ப் போகும்.

மீகா 3:7 தரிசனம் பார்க்கிறவர்கள் வெட்கி, குறிசொல்லுகிறவர்கள் நாணி, உத்தரவுகொடுக்கிற தேவன் இல்லாததினால் அவர்கள் எல்லாரும் தங்கள் வாயை மூடுவார்கள்.

"தங்கள் பற்களினால் கடிக்கிறவர்களாயிருந்து" - பாகாலின் விக்கிரகாராதனையில் விக்கிரகாராதனைக் காரர்கள் ஒலிவக்கிளைகளைத் தங்கள் பற்களினால் கடித்து, சமாதானம் என்று கத்துவது வழக்கம். ஒலிவக்கிளை சமாதானத்துக்கு அடையாளம்.

தீர்க்கதரிசன எண் - 5

"தரிசனங்காணக்கூடாத இராத்திரியும், குறிசொல்லக்கூடாத அந்தகாரமும் உங்களுக்கு வரும்;......" (மீகா 3:6-7) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. தரிசனங்காணக்கூடாத இராத்திரியும், குறிசொல்லக்கூடாத அந்தகாரமும் உங்களுக்கு வரும் (மீகா 3:6).
2. தீர்க்கதரிசிகளின்மேல் சூரியன் அஸ்தமித்து, அவர்கள்மேல் பகல் காரிருளாய்ப் போகும்.
3. தரிசனம் பார்க்கிறவர்கள் வெட்கப் படுவார்கள். (மீகா 3:7).
4. குறிசொல்லுகிறவர்கள் நாணுவார்கள்.
5. உத்தரவு கொடுக்கிற தேவன் இல்லாததினால் அவர்கள் எல்லாரும் தங்கள் வாயை மூடுவார்கள்.

4. மீகாவும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் - (3:5-7)

மீகா 3:8 நானோ, யாக்கோபுக்கு அவன் மீறுதலையும், இஸ்ரவேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்கும்படி, கர்த்தருடைய ஆவி அருளிய பலத்தினாலும், நியாயத்தினாலும், பராக்கிரமத்தினாலும் நிரப்பப் பட்டிருக்கிறேன்.

"கர்த்தருடைய ஆவி அருளிய பலத்தினாலும், நியாயத்தினாலும், பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறேன்" - கள்ளத் தீர்க்கதரிசிகள் வெட்கமடைகிறார்கள். நாணுகிறார்கள். அவர்களுக்கு அந்தகாரமும் ராத்திரியும் உண்டாயிருக்கிறது. அவர்களுக்குச் சூரியன் அஸ்தமித்திருக்கிறது. பகல் அவர்களுக்குக் காரிருளாகப் போயிருக்கிறது. ஆனால் கர்த்தருடைய தீர்க்கதரிசிக்கோ கர்த்தருடைய ஆவியானவர் பலத்தையும், நியாயத்தையும், பராக்கிரமத்தையும் அருளுகிறார். (மீகா 3:6-7) தீர்க்கதரிசி ஆவியானவர் கொடுத்திருக்கும் இந்த ஆசீர்வாதங்களைப் பயன்படுத்துகிறார். யாக்கோபுக்கு அவன் மீறுதலையும், இஸ்ரவேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்கும்படி பயன்படுத்துகிறார்.

3 அதிகாரம்

5. தலைவர்களின் எட்டு பாவங்கள்

மீகா 3:9 நியாயத்தை அருவருத்து, செம்மையானவைகளை எல்லாம் கோணலாக்கி,

மீகா 3:10 சீயோனை இரத்தப் பழியினாலும், எருசலேமை அநியாயத்தினாலும் கட்டுவிக்கிற யாக்கோபு வம்சத்துத் தலைவர்களே, இஸ்ரவேல் வம்சத்து அதிபதிகளே, இதைக் கேளுங்கள்.

மீகா 3:11 அதின் தலைவர்கள் பரிதானத்துக்கு நியாயந் தீர்க்கிறார்கள்; அதின் ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசிக்கிறார்கள்; அதின் தீர்க்கதரிசிகள் பணத்துக்குக் குறிசொல்லுகிறார்கள்; ஆகிலும் அவர்கள் கர்த்தரை சார்ந்துகொண்டு: கர்த்தர் எங்கள் நடுவில் இல்லையோ? தீங்கு எங்கள்மேல் வராது என்கிறார்கள்.

"யாக்கோபு வம்சத்துத் தலைவர்களே" - இந்த வாக்கியத்திற்கு யாக்கோபு வம்சத்து வீட்டாரே என்று பொருள். இந்த வாக்கியம் இந்த அதிகாரத்தில் இரண்டு இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (மீகா 3:1,10,11)

தலைவர்களின் பாவங்கள்

1. தலைவர்கள் பரிதானத்துக்கு நியாயந் தீர்க்கிறார்கள்.
2. அதின் ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசிக்கிறார்கள்.
3. அதின் தீர்க்கதரிசிகள் பணத்துக்குக் குறி சொல்லுகிறார்கள்.

தலைவர்களும், ஆசாரியர்களும், தீர்க்கதரிசிகளும் ஆதரிக்கப்படவேண்டும். ஆனால் இவர்கள் பணத்திற்காகத் தேவனுடைய ஊழியங்களைச் செய்யக்கூடாது.

6. எருசலேம், தேவாலயம் ஆகியவற்றின் முழுமையான அழிவு

மீகா 3:12 ஆகையால் உங்கள் நிமித்தம் சீயோன் வயல்வெளியைப்போல உழப்பட்டு, எருசலேம் மண்மேடுகளாய்ப்போம், ஆலயத்தின் பர்வதம் காட்டு மேடுகளாய்ப்போம்.

தீர்க்கதரிசன எண் - 6

"ஆகையால் உங்கள்நிமித்தம் சீயோன் வயல்வெளியைப்போல உழப்பட்டு ....." (மீகா 3:12) இந்தத் தீர்க்கதரிசனம்நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. சீயோன் வயல்வெளியைப்போல உழப்படும். (மீகா 3:12).
2. எருசலேம் மண்மேடுகளாய்ப்போம்.
3. ஆலயத்தின் பர்வதம் காட்டு மேடுகளாய்ப்போம்.

இந்தக் காரியத்தை எரேமியாவும் முன்னறிவித்திருக்கிறார். (எரே 26:18).

4 அதிகாரம்

III. ஆயிர வருஷ மீட்பு

1.மேசியாவினுடைய இராஜ்ஜியத்தின் விஸ்தீரணமும் மேன்மையும் - (ஏசா 2:1)

மீகா 4:1 ஆனாலும், கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப் பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப் பட்டிருக்கும், எல்லா ஜாதிகளும் அதினிடத்திற்கு ஓடிவருவார்கள்.

மீகா 4:2 திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்.

"கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம்" - கர்த்தர் பர்வதங்களில் வாசம்பண்ணுகிறவர். கர்த்தருடைய பரலோக நகரமும், பூமிக்குரிய எருசலேமும் அவருடைய தலைநகரங்களாகும். இந்த நகரங்கள் பர்வதங்களின்மேல் உள்ளன. (ஏசா 1:2-4; வெளி 21:9-27).

"எல்லா ஜாதிகளும் அதினிடத்திற்கு ஓடிவருவார்கள்." - (ஏசா 2:2-4; சக 8:23; சக 14:16-21)

தீர்க்கதரிசன எண் - 7

"ஆனாலும், கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம்......" (மீகா 4:1-13) மீகா 4:9-10 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. மீகா 4:1-8,11-13 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. தனக்கு ராஜாவும், ஆலோசனைக்காரரும் இல்லாததினால் யூதா சத்தமிட்டுக் கதறும். (மீகா 4:9).
2. பிரசவிக்கிற ஸ்திரீக்கு ஒத்த வேதனை யூதாவுக்கு உண்டாகும். (மீகா 4:9-10).
3. யூதா நகரத்திலிருந்து புறப்பட்டு, வெளிகளில் தங்கும். (மீகா 4:10; 2இராஜா 25:4-5).
4. பாபிலோன் வரைக்கும் போகும். (மீகா 4:10).
5. பாபிலோனிலிருந்து விடுவிக்கப்படும். (மீகா 4:100
6. அங்கே கர்த்தர் யூதாவை அதன் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி மீட்பார். (மீகா 4:10; எஸ்றா 1)

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. கடைசி நாட்களில் (கர்த்தருடைய நாளில், ஆயிரம் வருஷ அரசாட்சியில்) ......இவை நிறைவேறும். (மீகா 4:1; ஏசா 2:2).
2. கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்படும்.
3. எல்லா ஜாதிகளும் அதினிடத்திற்கு ஓடிவருவார்கள். (மீகா 4:1; ஏசா 2:3).
4. திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள் என்பார்கள். (மீகா 4:2; ஏசா 2:3; சக 14:16-21).
5. அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள் (மீகா 4:2; ஏசா 2:3).
6. சீயோனிலிருந்து வேதம் முழு உலகத்திற்கும் வெளிப்படும்.

4 அதிகாரம்

7. எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். - எருசலேமிலிருந்து மிஷினெரிகள் உலகம் முழுவதும் புறப்பட்டுச் சென்று கர்த்தரைக் குறித்து பிரசங்கிப்பார்கள். (மீகா 4:2; ஏசா 2:3; ஏசா 11:9; ஏசா 52:7; ஏசா 66:19-21; சக 8:23).

8. மேசியா திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்ப்பார். (மீகா 4:3; ஏசா 2:4; ஏசா 11:1-10).

9. தூரத்திலுள்ள பலத்த ஜாதிகளைக் கடிந்துகொள்ளுவார் (மீகா 4:3; ஏசா 2:4-5; சக. 14:9,16-21).

10. அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அறிவாள்களாகவும் அடிப்பார்கள் (மீகா 4:3; ஏசா 2:4).

11. ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி பட்டயம் எடுப்பதில்லை; இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை.

12. அவனவன் தன்தன் திராட்சச்செடியின் நிழலிலும், தன்தன் அத்திமரத்தின் நிழலிலும் உட்காருவான்.(மீகா 4:4; சக 3:10).

13. அவர்களைப் பயப்படுத்துவார் ஒருவரும் இருக்கமாட்டார்கள். (மீகா 4:4).

14. அந்நாளிலே மேசியா நொண்டியானவளைச் சேர்த்து, தள்ளுண்டவளையும் தீங்கு அனுபவித்தவளையும் கூட்டிக் கொள்வார். (மீகா 4:6; ஏசா 11:10-12)

15. மேசியா நொண்டியானவளை மீதியான ஜனமாகவும், தூரமாய்த் தள்ளுண்டு போனவளைப் பலத்த ஜாதியாகவும் வைப்பார். (மீகா 4:7).

16. அவர்கள்பேரில் கர்த்தர் சீயோன் பர்வதத்திலே இதுமுதல் என்றென்றைக்கும் ராஜாவாயிருப்பார். (மீகா 4:7; ஏசா 9:6-7; எசே 43:7; தானி 2:44-45; தானி 7:13-4,18,27; சக 14:9; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 22:1-10; வெளி 22:4-5).

17. ராஜரிகம் சீயோன் மலைக்கும், எருசலேமிற்கும் வரும். (மீகா 4:8; சக 14:1-5,9,16-21).

18. சீயோன் தீட்டுப்படுவாளாக, எங்கள் கண் அவளைக் காண்பதாக என்று சொல்லி, அநேக ஜாதியார் அதற்கு விரோதமாகக் கூடியிருப்பார்கள். (மீகா 4:11-14).

19. கர்த்தர் அரிக்கட்டுகளைப் போல அவர்களைக் களத்திலே சேர்ப்பார். (மீகா 4:12).

20. சீயோன் குமாரத்தியே, நீ எழுந்து போரடி; கர்த்தர் உன் கொம்புகளை இரும்பாக்குவார். (மீகா 4:13).

21. உன் குளம்புகளை வெண்கலமுமாக்குவார்.

22. சீயோன் குமாரத்தி அநேக ஜனங்களை நொறுக்கிப்போடும்.

23. அவர்கள் தேடிச் சேர்த்ததைக் கர்த்தருக்கென்றும், அவர்களுடைய ஆஸ்தியை பூமிக்கெல்லாம் ஆண்டவராயிருக்கிற வருக்கென்றும் கர்த்தர் நியமிப்பார்.

“வேதம்” (the law) - சமுதாயப் பிரமாணங்களும், மார்க்கப் பிரமாணங்களும். (ஏசா 2:2-4; சக 14:16-21).

2. உலக அமைதி - (ஏசா 2:1-4)

மீகா 4:3 அவர் திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து, தூரத்திலுள்ள பலத்த ஜாதிகளைக் கடிந்துகொள்ளுவார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அறிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி பட்டயம் எடுப்பதில்லை; இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை.

4 அதிகாரம்

"நியாயந்தீர்த்து" - ஜனங்களை ஆளுகை செய்து நியாயம் விசாரிப்பது. *(சங் 2:5,9; சங் 72:8,11; சங் 82:8; சங் 96:13; சங் 110:5-6; ஏசா 11:3-5; ஏசா 51:5; மத் 25:31-46; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 20:1-10).*

"மண்வெட்டிகள்" **(plowshares)** - *(ஏசா 2:4; யோவே 3:10)*

"ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி பட்டயம் எடுப்பதில்லை" - உலகம் முழுவதிலும் சமாதானமும், செழிப்பும் உண்டாயிருக்கும்*(ஏசா 2:2-4; சக 14:16-21).*

3. உலக செழுமை - *(சக 3:10)*

> மீகா 4:4 அவனவன் தன்தன் திராட்சச்செடியின் நிழலிலும், தன்தன் அத்திமரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்; சேனைகளுடைய கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று.

"அவனவன் தன்தன் திராட்சச்செடியின் நிழலில்.....உட்காருவான்" - *(1இராஜா 4:25; சக 3:10)* இது எபிரெயருடைய வழக்குச் சொல்லாகும். இந்த வாக்கியம் ஆசீர்வாதமான வாழ்க்கையைக் கூறுவதற்குப் பயன்படுத்தப் படுகிறது.

4. உலக மார்க்கம் - *(மல் 1:11)*

> மீகா 4:5 சகல ஜனங்களும் தங்கள் தங்கள் தேவனுடைய நாமத்தைப் பற்றிக் கொண்டு நடப்பார்கள்; நாங்களும் எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைப்பற்றிக் கொண்டு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நடப்போம்.

"எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைப் பற்றிக்கொண்டு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நடப்போம்" - இஸ்ரவேலும், புறஜாதியாரும் தேவனை நித்திய காலமாகச் சேவிப்பார்கள். சகல ஜனங்களுக்கும் கர்த்தரே தேவனாக இருப்பார்.

5. மேசியாவின் கீழ் நித்திய தேசத்திற்கு இஸ்ரவேலரின் மீட்பு - *(2சாமு 7)*

> மீகா 4:6 கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: அந்நாளிலே நான் நொண்டியானவளைச் சேர்த்து, தள்ளுண்டவளையும் தீங்கு அனுபவித்தவளையும் கூட்டிக் கொண்டு,

> மீகா 4:7 நொண்டியானவளை மீதியான ஜனமாகவும், தூரமாய்த் தள்ளுண்டுபோனவளைப் பலத்த ஜாதியாகவும் வைப்பேன்; அவர்கள்பேரில் கர்த்தர் சீயோன் பர்வதத்திலே இதுமுதல் என்றென்றைக்கும் ராஜாவாயிருப்பார்.

> மீகா 4:8 மந்தையின் துருக்கமே, சீயோன் குமாரத்தியின் அரணே, முந்தின ஆளுகை உன்னிடத்தில் வரும்; ராஜரிகம் எருசலேம் குமாரத்தியினிடத்தில் வரும்.

மீகா 4:6-8 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள்

1. கர்த்தர் எல்லா தேசங்களிலுமிருந்து யூதர்களைக் கூட்டி வந்து அவர்களுடைய சொந்த தேசத்தில் ஸ்தாபிப்பார். *(மீகா 4:6)*
2. கூட்டிச் சேர்க்கப்பட்ட யூதர்களைப் பெரிய தேசமாக ஸ்தாபிப்பார். *(மீகா 4:7)*
3. கிறிஸ்து இஸ்ரவேலின்மீது நித்திய காலமாக ஆளுகை செய்வார். *(மீகா 4:7; ஏசா 9:6-7; எசே 43:7; தானி 2:44-45; தானி 7:13-14; சக 14:9; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 20:1-10)*

4 அதிகாரம்

4. கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்தின் தலைநகரம் சீயோன் பர்வதத்திலும், எருசலேமிலும் இருக்கும். (மீகா 4:8; மீகா 4:1-5; ஏசா 2:2-4; எரே 3:17; எசே 47; சக 14:9,16-21)

இவை அனைத்திற்கும் முன்பு பாபிலோனிய சிறையிருப்பு உண்டாகும். (மீகா 4:9-10)

6. பாபிலோனியச் சிறையிருப்பு முதலாவது வரும்

மீகா 4:9 இப்போதும் நீ சத்தமிட்டுக் கதறுவானேன்? ராஜாவானவர் உன்னிடத்தில் இல்லையோ? உன் ஆலோசனைக்காரர் அழிந்து போனார்களோ? பிரசவிக்கிற ஸ்திரீக்கு ஒத்த வேதனை உனக்கு உண்டாகும்.

மீகா 4:10 சீயோன் குமாரத்தியே, பிரசவ ஸ்திரீயைப் போல அம்பாயப்பட்டு வேதனைப்படு; நீ இப்போது நகரத்திலிருந்து புறப்பட்டு, வெளிகளில் தங்கி, பாபிலோன் வரைக்கும் போவாய், அங்கே விடுவிக்கப்படுவாய்; அங்கே கர்த்தர் உன்னை உன் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி மீட்பார்.

"பிரசவிக்கிற ஸ்திரீக்கு ஒத்த வேதனை உனக்கு உண்டாகும்" - பாபிலோன் தேசத்தார் இஸ்ரவேலை முழுவதுமாக அழித்துப் போடுவார்கள். நேபுகாத்நேச்சார் கி.மு. 606 ஆம் வருஷத்தில் எருசலேமைப் பிடித்தான். இஸ்ரவேல் புத்திரருக்கு அக்காலத்தில் அதிக வேதனை உண்டாயிற்று.

7. இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படும் விதம் - (யோவே 3; சக 14; வெளி 19:20)

மீகா 4:11 சீயோன் தீட்டுப்படுவாளாக, எங்கள் கண் அவளைக் காண்பதாக என்று சொல்லி, அநேக ஜாதியார் உனக்கு விரோதமாகக் கூடியிருக்கிறார்கள்.

மீகா 4:12 ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய நினைவுகளை அறியாமலும், அவருடைய யோசனையை உணராமலும் இருக்கிறார்கள்; அவர் அரிக்கட்டுகளைப் போல அவர்களைக் களத்திலே சேர்ப்பார்.

மீகா 4:13 சீயோன் குமாரத்தியே, நீ எழுந்து போரடி; நான் உன் கொம்புகளை இரும்பும், உன் குளம்புகளை வெண்கலமுமாக்குவேன்; நீ அநேக ஜனங்களை நொறுக்கிப்போடுவாய்; அவர்கள் தேடிச் சேர்த்ததை நீ கர்த்தருக்கென்றும், அவர்களுடைய ஆஸ்தியை பூமிக்கெல்லாம் ஆண்டவராயிருக்கிற வருக்கென்றும் நியமிப்பாய்.

"அநேக ஜாதியார் உனக்கு விரோதமாகக் கூடியிருக்கிறார்கள்" - அர்மெகதோன் யுத்தத்தில் இஸ்ரவேல் தேசம் மட்டுமே கிறிஸ்துவோடு சேர்ந்து இருக்கும். மற்ற தேசங்கள் யூதருக்கும், எருசலேமிற்கும் விரோதமாகக் கூடி வருவார்கள். (சக 14:3, 14-15).

அர்மெகதோன் யுத்தம்

பல தேசங்கள் எருசலேமிற்கு விரோதமாகக் கூட்டிச் சேர்க்கப்படும். நேபுகாத்நேச்சாரின் நாட்களிலேயே பல தேசங்கள் எருசலேமிற்கு விரோதமாக எழும்பின. நேபுகாத்நேச்சாரின் காலத்திற்கும், இக்காலத்திற்கும் இடையே சுமார் 2,600 வருஷங்களாயிற்று. மீகாவின் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் இந்தச் சம்பவம் (மீகா 4:11) கர்த்தருடைய நாளில் நடைபெறும்.

4 அதிகாரம்

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது பூமியிலுள்ள பல தேசங்கள் கர்த்தருக்கு விரோதமாக யுத்தம் பண்ண கூட்டிச் சேர்க்கப்பட்டிருக்கும். (சக 14:1-5; வெளி 16:13-16; வெளி 19:11-21) யூதர்களை அழிப்பது அவர்களுடைய நோக்கம். ஆயினும் அவர்களுடைய பிரதான நோக்கம் வேறு விதமாக இருக்கும். இந்தப் பூமியில் இயேசு கிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதைத் தடைபண்ணுவதே அவர்களுடைய பிரதான நோக்கமாக இருக்கும்.

தனக்கு கொஞ்சக்காலம் மட்டுமே இருக்கிறது பிசாசிற்கு நன்றாகத் தெரியும். (வெளி 12:12) ஆகையினால் இக்காலத்தில் பிசாசானவன் எல்லா தேசங்களையும் கர்த்தருக்கு விரோதமாகக் கூட்டிச் சேர்ப்பான். அவர்களுக்குப் பயிற்சி கொடுப்பான். இயேசு கிறிஸ்து தம்முடைய வானத்தின் சேனையோடு இந்தப் பூமிக்கு வரும் அதே நாளில் பிசாசானவன் தன்னுடைய சேனைகளைப் பாலஸ்தீன தேசத்தில் கூட்டிச் சேர்ப்பான். கர்த்தருடைய சேனையில் பரிசுத்த தூதர்களும், (மத் 16:27; மத் 24:29-31; மத் 25:31-46; 2தெச 1:7-10) உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களும் (தானி 7:18,22,27; சக 14:1-5; வெளி 17:14; வெளி 19:11-21) இருப்பார்கள்.

இந்த யுத்தத்தில் இஸ்ரவேல் தேசம் மாத்திரமே கர்த்தரோடு சேர்ந்திருக்கும். (சக 14:14-15). இந்த யுத்தம் ஒருநாள் மாத்திரமே நடைபெறும். இந்த யுத்தத்தில் இயேசு கிறிஸ்து வெற்றிபெறுவார். பிசாசின் சேனையில் ஆறில் ஒரு பகுதியைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் அழிக்கப்படுவார்கள். (எசே 39:2). இஸ்ரவேலை அவர்களால் தீட்டுப்படுத்த முடியாது. அவர்கள் தங்களைத்தாங்களே தீட்டுப்படுத்திக் கொள்வார்கள்.

"அவர்கள் கர்த்தருடைய நினைவுகளை அறியாமலும், அவருடைய யோசனையை உணராமலும் இருக்கிறார்கள்" - பிசாசின் சேனையில் இருக்கிறவர்கள் கர்த்தருடைய நினைவுகளை அறியாமல் இருக்கிறார்கள். கர்த்தருடைய யோசனையை உணராமல் இருக்கிறார்கள். பிசாசானவன் இவர்களை வஞ்சித்து தன் பக்கமாகக் கூட்டிச் சேர்த்திருக்கிறான். இவர்கள் எல்லோரும் பாலஸ்தீன தேசத்தில் கூட்டிச் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள். ஆனால் கர்த்தரோ அரிக்கட்டுகளைப் போல அவர்களைக் களத்திலே சேர்ப்பார். (மீகா 4:12). பிசாசிற்கும், அந்திக்கிறிஸ்துவிற்கும் கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கும் அவர்களுடைய தலைவர்கள் சிலருக்கும் கர்த்தருடைய நினைவுகளும், யோசனைகளும் தெரிந்திருக்கும். ஆனால் இவர்களுடைய சேனையில் உள்ளவர்களுக்குக் கர்த்தருடைய நினைவுகளும், யோசனைகளும் தெரிந்திருக்காது. பாலஸ்தீன தேசத்தில் யூதர்கள் மிகவும் கொஞ்சமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள். இவர்களோடு யுத்தம் பண்ணுவதற்குத் திரளானசேனை தேவையில்லை. ஆனாலும் பிசாசானவன் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு எதிராகத் திரளான சேனையைக்கூட்டிச் சேர்ப்பான்.

"சீயோன் குமாரத்தியே, நீ எழுந்து போரடி" - இந்தப் பூமியிலுள்ள எருசலேம் அந்திக் கிறிஸ்துவின்கீழ் தனக்கு எதிராக யுத்தம் பண்ண வரும் தேசத்தாரை எதிர்த்து யுத்தம் பண்ண வேண்டுமென்று இங்கு கட்டளை கொடுக்கப் பட்டிருக்கிறது. அர்மெகதோன் யுத்தத்தில் இஸ்ரவேல் தேசத்தார் மட்டுமே கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறார்கள். (சக 14:14).

கடைசி நாள் சம்பவங்கள்

1. கிறிஸ்து அர்மெகதோனில் அந்திக் கிறிஸ்துவோடும், அவனுடைய சேனையோடும் யுத்தம் பண்ணுவார். இந்த யுத்தத்தில் இஸ்ரவேல் தேசத்தார் மட்டுமே கிறிஸ்துவோடு கூட இருப்பார்கள். (மீகா 4:13; சக 14:14).

2. தேவன் இஸ்ரவேலின் கொம்புகளை இரும்பாக்குவார். (மீகா 4:13).

மீகா – தொகுப்புரை

4 அதிகாரம்

3. தேவன் இஸ்ரவேலின் குளம்புகளை வெண்கலமாக்குவார். (மீகா 4:14). இரும்பும், வெண்கலமும் வலிமைக்கு அடையாளமாகும். அந்திக் கிறிஸ்துவின் அழிவு அர்மெகதோன் யுத்தத்தில் பூரணமாக இருக்கும். (ஏசா 41:15; எரே 51:33). எருசலேமின் சேனையில் இருக்கிறவர்கள் விறகுகளுக்குள்ளே எரிகிற அக்கினி அடுப்புக்கும், வைக்கோல் கட்டுக்குள்ளே எரிகிற தீவட்டிக்கும் ஒப்பாக இருப்பார்கள். (சக 12:5-9).

4. இஸ்ரவேல் தேசத்தார் தங்களுக்கு விரோதமாக வந்திருக்கும் அநேக ஜனங்களை நொறுக்கிப்போடுவார்கள். (மீகா 4:13; சக 12:1-9; சக 14:14-15).

5. அவர்கள் தேடிச் சேர்த்ததை இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கென்றும், அவர்களுடைய ஆஸ்தியை பூமிக்கெல்லாம் ஆண்டவராயிருக்கிற வருக்கென்றும் நியமிப்பார்கள். (மீகா 4:13; சக 14:14).

5 அதிகாரம்

8. மேசியாவின் முதலாவது வருகையும் அவருடைய மீட்பின் கிரியையும் நித்திய மீட்பிற்கு அச்சாரம்

மீகா 5:1 சேனைகளையுடைய நகரமே, இப்போது தண்டுதண்டாகக் கூடிக்கொள்; நமக்கு விரோதமாக முற்றிக்கை போடப்படும்; இஸ்ரவேலுடைய நியாயாதிபதியைக் கோலினால் கன்னத்திலே அடிப்பார்கள்.

மீகா 5:2 எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்கு உள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது.

"சேனைகளையுடைய நகரம்" **(daughter of troops)** - யூதா இவ்வாறு அழைக்கப்படுகிறது. ஏனெனில் யூதாவின் மனுஷர் பெரும்பாதைகளில் கொள்ளையிடுகிறவர்களாகவும், கொலை பண்ணுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். (மீகா 2:8; மீகா 3:2). இவர்கள் இனிமேல் பாலஸ்தீனத்திற்கு விரோதமாக எழும்ப வேண்டும். கி.பி. 70 ஆம் வருஷத்தில் ரோமப்பேரரசின் படைத்தளபதி எருசலேமை அழித்தான். (மீகா 5:1; லூக்கா 21:20-24) இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையின் போது ரோமப்பேரரசார் எருசலேமின்மீது முற்றிக்கை போட்டார்கள். அவர்கள் இயேசு கிறிஸ்துவைக் கன்னத்தில் அறைந்தார்கள். (மத் 27:30).

"இஸ்ரவேலுடைய நியாயாதிபதி" - இயேசு கிறிஸ்து இஸ்ரவேலின் நியாயாதிபதியாகவும், எல்லா ஜனத்திற்கும் நியாயாதிபதியாகவும் இருக்கிறார். (மத் 25:31-46; அப் 17:31).

"கன்னத்திலே அடிப்பார்கள்" - யூதரும், ரோமரும் கிறிஸ்துவைக் கன்னத்தில் அடித்து துன்புறுத்தினார்கள். (மத் 26:67; மத் 27:30).

தீர்க்கதரிசன எண் - 8

"சேனைகளையுடைய நகரமே, இப்போது தண்டுதண்டாகக் கூடிக்கொள்......" (மீகா 5:1-15) மீகா 5:1-2 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. மீகா 5:3-15 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. சேனைகளையுடைய நகரமே, இப்போது தண்டுதண்டாகக் கூடிக்கொள்; நமக்கு விரோதமாகப் பாபிலோன் (மீகா 4:10) முற்றிக்கை போடும் (மீகா 5:1).

2. இஸ்ரவேலுடைய நியாயாதிபதியைக் (இயேசு கிறிஸ்து) கோலினால் கன்னத்திலே அடிப்பார்கள் (இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைகிறவர்கள்).

3. எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்கு உள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது. (மீகா 5:2).

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. பிரசவிக்கிறவள் (இஸ்ரவேலர்) பிரசவிக்கிற மட்டும் (இஸ்ரவேல் மனந்திரும்பி தேவனிடத்தில் திரும்புகிற மட்டும்) அவர்களை (இஸ்ரவேலர்) ஒப்புக் கொடுப்பார் (மீகா 5:3).

2. அப்பொழுது (இஸ்ரவேல் கர்த்தரிடத்தில் மனந்திரும்பிய பின்பு) அவருடைய சகோதரரில் மீதியானவர்கள் இஸ்ரவேல் புத்திரரோடுங்கூடத் திரும்புவார்கள். (ஏசா 66:7-8; சக 12:10-13:1; ரோமர் 11:25-29)

3. அவர் (மேசியா தம்முடைய இரண்டாம் வருகையின்போது) நின்றுகொண்டு, கர்த்தருடைய பலத்தோடும் தம்முடைய தேவனாகிய கர்த்தருடைய நாமத்தின் மகத்துவத்தோடும் மேய்ப்பார் (மீகா 5:4).

மீகா – தொகுப்புரை

5 அதிகாரம்

4. அவர்கள் (இஸ்ரவேல்) நிலைத்திருப்பார்கள்.

5. அவர் (மேசியா) இனி பூமியின் எல்லைகள் பரியந்தமும் மகிமைப்படுவார்.

6. அசீரியன் (வருங்காலத்தில் அசீரியாவிலிருந்து எழும்பும் அந்திக் கிறிஸ்து) நம்முடைய தேசத்திலே (இஸ்ரவேல்) வரும்போதும், நம்முடைய அரண்மனைகளை மிதிக்கும்போதும் இவரே (மேசியா) சமாதான காரணர். (மீகா 5:5).

7. அப்பொழுது (அந்திக்கிறிஸ்து நம்முடைய அரமனைகளில் மிதிக்கும்போது) ஏழு மேய்ப்பரையும் மனுஷரில் எட்டு அதிபதிகளையும் அவனுக்கு விரோதமாக நிறுத்துவார்.

8. இவர்கள் அசீரியா தேசத்தையும், நிம்ரோதின் தேசத்தையும், அதினுடைய வாசல்களுக்கு உட்புறமாகப் பட்டயத்திற்கு இரையாக்குவார்கள் (மீகா 5:6).

9. அசீரியன் நம்முடைய தேசத்தில் வரும்போதும், நம்முடைய எல்லைகளை மிதிக்கும்போதும் அவனுக்கு நம்மைத் தப்புவிப்பார்.

10. யாக்கோபிலே மீதியானவர்கள் கர்த்தராலே வருகிற பனியைப் போலவும், மனுஷனுக்குக் காத்திராமலும், மனுபுத்திரருக்குத் தாமதியாமலும், பூண்டுகள்மேல் வருகிற மழைகளைப் போலவும், அநேக ஜனங்களின் நடுவிலே இருப்பார்கள். (மீகா 5:7).

11. யாக்கோபிலே மீதியானவர்கள், சிங்கம் காட்டு மிருகங்களுக்குள்ளே இருக்கிறதற்குச் சமானமாகவும், கடந்துபோய் மிதித்துத் தப்புவிப்பார் இல்லாமல் பீறிப்போடுகிற பாலசிங்கம் ஆட்டுமந்தைகளுக்குள்ளே இருக்கிறதற்குச் சமானமாகவும் ஜாதிகளுக்குள் அநேக ஜனங்களின் நடுவிலே இருப்பார்கள். (மீகா 5:8).

12. உன்னுடைய கை உன் விரோதிகளின்மேல் உயரும்; உன் சத்துருக்களெல்லாரும் சங்கரிக்கப்படுவார்கள். (மீகா 5:9)

13. அந்நாளிலே உன் குதிரைகளை உன் நடுவில் இராதபடிக்குச் சங்கரித்து, உன் இரதங்களை மேசியா அழிப்பார். (மீகா 5:10)

14. மேசியா உன் தேசத்துப் பட்டணங்களைச் சங்கரித்து, உன் அரண்களையெல்லாம் நிர்மூலமாக்குவார். (மீகா 5:11)

15. சூனிய வித்தைகள் உன் கையில் இராதபடிக்கு மேசியா அகற்றுவார். நாள் பார்க்கிறவர்கள் உன்னிடத்தில் இல்லாமற் போவார்கள். (மீகா 5:12)

16. மேசியா உன் சுரூபங்களையும் உன் சிலைகளையும் உன் நடுவில் இராதபடிக்கு நிர்மூலமாக்குவார். (மீகா 5:13)

17. உன் கையின் கிரியையை நீ இனிப் பணிந்துகொள்ளாய்.

18. மேசியா உன் விக்கிரகத்தோப்புகளை உன் நடுவில் இராதபடிக்குப் பிடுங்குவார். (மீகா 5:14)

19. உன் பட்டணங்களை அழிப்பார்.

20. செவிகொடாத புறஜாதிகளிடத்திலே மேசியா கோபத்தோடும் உக்கிரத்தோடும் நீதியைச் சரிக்கட்டுவார். (மீகா 5:15)

"பெத்லகேம்" - மேசியா பெத்லகேமில் பிறப்பார் என்னும் முன்னறிவிப்பு நிறைவேறிற்று. (மத் 2:1).

"இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்" - மேசியா யூதாவிலிருந்து வந்தார். (ஆதி 49:10) இந்த வாக்கியமும் நிறைவேறிற்று. (மத் 1:1-18; லூக்கா 3:23-38; எபி 7:14; வெளி 5:5).

5 அதிகாரம்

"இஸ்ரவேலை ஆளப்போகிறவர்" - இயேசு கிறிஸ்து இஸ்ரவேலையும், மற்ற தேசங்களையும் நித்திய காலமாக ஆளப்போகிறவர். (ஏசா 9:6-7; எசே 43:7; தானி 7:13-14; சக 14:1-5,9,16-21; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 20:1-10; வெளி 22:4-5). தம்முடைய முதலாம் வருகையின்போது இயேசு கிறிஸ்து யூதாவிலிருந்து வந்தார். அவர் தம்முடைய இரண்டாம் வருகையின்போது பரலோகத்திலிருந்து வந்து, இஸ்ரவேலையும், மற்ற தேசங்களையும் ஆளுகை செய்வார். இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையில் அவருடைய பிறப்பும், மனுக்குலத்தை மீட்பதற்காக அவர் கல்வாரி சிலுவையில் மரித்ததும் நடைபெற்றுள்ளது. இயேசு கிறிஸ்து தம்முடைய இரண்டாம் வருகையில் இந்த உலகை ஆளுகை செய்வதற்காக வருவார். (ஏசா 9:6-7; ஏசா 52:13-15; ஏசா 61:1-2; சக 9:9-10).

"அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது" - யூதா கோத்திரத்தில் பெத்லகேமில் பிறந்தவர் நித்திய தேவனாக இருக்கிறவர். அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது. அவர் சதாகாலங்களிலும் இருக்கிறவர். (மீகா 5:2; ஏசா 9:6-7; யோவான் 1:1-3,14; எபி 1:8; வெளி 1:8; வெளி 2:8; வெளி 22:13) அவர் மனுஷனாக இந்தப் பூமிக்கு வந்தபோது, மனுஷனாகப் பிறந்தார். மனுஷனாக வளர்ந்தார். அவர் தேவனாக இருக்கிறபடியினால் அவருக்கு ஆரம்பமும், பிறப்பும் இராது. (அப் 13:33)

9. இஸ்ரவேல் மனந்திரும்பும் வரையிலும் அது ஒப்புக்கொடுக்கப்படும்

மீகா 5:3 ஆனாலும் பிரசவிக்கிறவள் பிரசவிக்குமட்டும் அவர்களை ஒப்புக் கொடுப்பார்; அப்பொழுது அவருடைய சகோதரரில் மீதியானவர்கள் இஸ்ரவேல் புத்திரரோடுங்கூடத் திரும்புவார்கள்.

"அவருடைய சகோதரரில் மீதியானவர்கள் இஸ்ரவேல் புத்திரரோடுங்கூடத் திரும்புவார்கள்" - இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையின் போது இஸ்ரவேல் புத்திரர் இஸ்ரவேலின் நியாயாதிபதியாகிய இயேசு கிறிஸ்துவை மறுதலித்து விட்டார்கள். (மீகா 5:1-2) கர்த்தரும் யூதரைப் புறஜாதி தேசங்களில் சிதறிப் போகுமாறு ஒப்புக்கொடுத்து விடுவார். (லூக்கா 21:20-24) இஸ்ரவேல் தேசத்தார் புறஜாதி தேசங்களில் வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலும் இஸ்ரவேலுக்கு வேதனை உண்டாயிருக்கும். (ஏசா 66:7-8; சக 10:12-13:1; ரோமர் 11:25-29) அதன் பின்பு, இஸ்ரவேல் தேசத்தாரில் இதுவரையிலும் தங்கள் தேசத்திற்குத் திரும்பாதவர்களைக் கர்த்தர் கூட்டிச் சேர்த்து அவர்களுடைய தேசத்திற்குத் திரும்பவும் அழைத்து வருவார். (ஏசா 11:10-12)

இஸ்ரவேலின் வேதனை

இஸ்ரவேல் தேசம் பிரசவிக்கிற ஸ்திரீக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறது. (மீகா 5:3; மீகா 4:9-10; ஏசா 66:7-8; எரே 30:6-9; மத் 24:8; வெளி 12) கடைசி நாட்களில் இஸ்ரவேல் புத்திரர் மட்டுமே இதுபோன்ற வேதனைகளை அனுபவிப்பார்கள். வருங் காலத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு இரண்டு வேதனைகள் உண்டாகும். அவையாவன:

1. வெளி 12:1-6 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஆண்பிள்ளையை ஸ்திரீயானவள் பெற்றபோது. (மீகா 5:3; எரே 30:6-9).

2. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நாளின்போது ஸ்திரீயானவள் மறுபடியும் பிறப்பதற்காகப் பிரசவ வேதனையை அனுபவிக்கும்போது. (மீகா 5:3; ஏசா 66:7-8; சக 12:10-13:1; ரோமர் 11:25-29).

மீகா – தொகுப்புரை

5 அதிகாரம்

10. **மேசியாவின் இரண்டாம் வருகையின் போது அந்திக் கிறிஸ்துவிடமிருந்து இஸ்ரவேல் மீட்கப்படும்** - (ஏசா 14:3-23; 63:1-5; யோவே 2:1-3:17; சக 14:1-15; மத் 25:31-46; 2தெச 1:7-10; யூதா 14-15; வெளி 19:11-21)

மீகா 5:4 அவர் நின்றுகொண்டு, கர்த்தருடைய பலத்தோடும் தம்முடைய தேவனாகிய கர்த்தருடைய நாமத்தின் மகத்துவத்தோடும் மேய்ப்பார்; ஆகையால் அவர்கள் நிலைத்திருப்பார்கள்; அவர் இனி பூமியின் எல்லைகள் பரியந்தமும் மகிமைப்படுவார்.

மீகா 5:5 இவரே சமாதான காரணர்; அசீரியன் நம்முடைய தேசத்திலே வரும்போதும், நம்முடைய அரண்மனைகளை மிதிக்கும்போதும், ஏழு மேய்ப்பரையும் மனுஷரில் எட்டு அதிபதிகளையும் அவனுக்கு விரோதமாக நிறுத்துவேன்.

மீகா 5:6 இவர்கள் அசீரியா தேசத்தையும், நிம்ரோதின் தேசத்தையும், அதினுடைய வாசல்களுக்கு உட்புறமாகப் பட்டயத்திற்கு இரையாக்குவார்கள்; அசீரியன் நம்முடைய தேசத்தில் வரும்போதும், நம்முடைய எல்லைகளை மிதிக்கும்போதும் அவனுக்கு நம்மைத் தப்புவிப்பார்.

"அவர் நின்றுகொண்டு" - அசீரியர் யூதா தேசத்திற்குள் வந்து, யூதாவின் அரமனைகளை மிதிக்கும்போது மேசியா நின்றுகொண்டு தம்முடைய ஜனத்தைக் காப்பார். அப்போது "அவர்கள்" (இஸ்ரவேலர்கள்) கர்த்தருடைய மந்தைகளாக நிலைத்திருப்பார்கள். (மீகா 5:5).

"அசீரியன்" - இந்த வார்த்தை அந்திக் கிறிஸ்துவைக் குறிக்கிறது. அந்திக்கிறிஸ்து அசீரிய தேசத்திலிருந்து எழும்புவான். இவன் பாபிலோனின் ராஜா (ஏசா14), சீரியன் (தானி 11:35-45), வரப்போகிற பிரபு (ரோமன்) (தானி 9:26-27), கிரேக்கன் (சக 9:13) என்றும் அழைக்கப்படுவான். மீகா, ஏசாயா ஆகியோரின் காலத்தில் அசீரியர்கள் மிகப்பெரிய பேரரசாக விளங்கினார்கள். இதனால் வருங்காலத்து அந்திக்கிறிஸ்துவை இவர்கள் அசீரியன் என்று அழைக்கிறார்கள். மீகா 5:3-15 ஆகிய வசனங்கள் அசீரியன் மூலமாக நிறைவேறும். அவற்றின் விவரம் வருமாறு:

1. பிரசவிக்கிறவள் பிரசவிக்குமட்டும் அவர்களை ஒப்புக்கொடுப்பார் (மீகா 5:3).
2. அப்பொழுது அவருடைய சகோதரரில் மீதியானவர்கள் இஸ்ரவேல் புத்திரரோடுங்கூடத் திரும்புவார்கள்.
3. மேசியா இனி பூமியின் எல்லைகள் பரியந்தமும் மகிமைப்படுவார். (மீகா 5:4).
4. மேசியாவே சமாதான காரணர் (மீகா 5:5).
5. இஸ்ரவேல் தன்னுடைய எல்லா சத்துருக்களையும் ஜெயிக்கும். (மீகா 5:5-6).
6. மேசியா இஸ்ரவேலரை அசீரியரிடமிருந்து தப்புவிப்பார். (மீகா 5:6).
7. யாக்கோபிலே மீதியானவர்கள் அநேக ஜனங்களின் நடுவிலே இருப்பார்கள். (மீகா 5:7-8).
8. இஸ்ரவேலின் சத்துருக்களெல்லாரும் சங்கரிக்கப்படுவார்கள். (மீகா 5:9).
9. குதிரைகளும், பட்டணங்களும், அரண்களும் அழிக்கப்படும். (மீகா 5:10-11).
10. சூனிய வித்தைகள் இஸ்ரவேலின் கையில் இராதபடிக்கு அகற்றப்படும். நாள் பார்க்கிறவர்கள் இஸ்ரவேலில் இல்லாமற் போவார்கள். (மீகா 5:11-15).

5 அதிகாரம்

"அரண்மனைகளை மிதிக்கும்போதும்" - மீகா, ஏசாயா, எசேக்கியா ஆகியோரின் காலத்தில் அசீரியர்கள் யூதாவின் அரண்மனைகளை மிதிக்கவில்லை. இது வருங்காலத்து அந்திக்கிறிஸ்துவின் நாட்களில் நடைபெறும் சம்பவம். அந்திக்கிறிஸ்து பாலஸ்தீன தேசத்தையும், எருசலேமையையும், எருசலேமிலுள்ள யூதருடைய வருங்காலத்து தேவாலயத்தையும் கைப்பற்றுவான். (தானி 9:27; தானி 11:40-45; மத் 24:15; 2தெச 2:3-4; வெளி 11:1-2).

"ஏழு மேய்ப்பரையும் மனுஷரில் எட்டு அதிபதிகளையும் அவனுக்கு விரோதமாக நிறுத்துவேன்." - இந்த மேய்ப்பரும், அதிபதிகளும் யாரென்று வெளிப்படுத்தப் படவில்லை. ஆயினும் இந்த முன்னறிவிப்பு அப்படியே நிறைவேறும்.

"இவர்கள் அசீரியா தேசத்தை........ பட்டயத்திற்கு இரையாக்குவார்கள்" - இவர்கள் என்பது இஸ்ரவேலின் சேனையை வழிநடத்துகிறவர்களைக் குறிக்கும். இவர்கள் அந்திக்கிறிஸ்துவின்மீது ஜெயம் பெறுவார்கள். அசீரியன் பாலஸ்தீன தேசத்திற்கு வரும்போது மேசியா இஸ்ரவேல் தேசத்தாரை அவனுடைய பிடியிலிருந்து விடுவிப்பார்.

"நிம்ரோதின் தேசத்தையும்" - மேசியாவின் இரண்டாம் வருகையில் அவர் அசீரியாவையும், நிம்ரோதையும் ஜெயிப்பார்.

11. மேசியாவின் வருகையின்போது இஸ்ரவேல் மீட்கப்படும் - (மத் 24:31; ஏசா 11:11)

மீகா 5:7 யாக்கோபிலே மீதியானவர்கள் கர்த்தராலே வருகிற பனியைப்போலவும், மனுஷனுக்குக் காத்திராமலும், மனுபுத்திரருக்குத் தாமதியாமலும், பூண்டுகள்மேல் வருகிற மழைகளைப் போலவும், அநேக ஜனங்களின் நடுவிலே இருப்பார்கள்.

மீகா 5:8 யாக்கோபிலே மீதியானவர்கள், சிங்கம் காட்டு மிருகங்களுக்குள்ளே இருக்கிறதற்குச் சமானமாகவும், கடந்துபோய் மிதித்துத் தப்புவிப்பார் இல்லாமல் பீறிப்போடுகிற பாலசிங்கம் ஆட்டுமந்தைகளுக்குள்ளே இருக்கிற தற்குச் சமானமாகவும் ஜாதிகளுக்குள் அநேக ஜனங்களின் நடுவிலே இருப்பார்கள்.

மீகா 5:9 உன்னுடைய கை உன் விரோதிகளின் மேல் உயரும்; உன் சத்துருக்களெல்லாரும் சங்கரிக்கப் படுவார்கள்.

மீகா 5:10 அந்நாளிலே நான் உன் குதிரைகளை உன் நடுவில் இராதபடிக்குச் சங்கரித்து, உன் இரதங்களை அழித்து,

மீகா 5:11 உன் தேசத்துப் பட்டணங்களைச் சங்கரித்து, உன் அரண்களையெல்லாம் நிர்மூலமாக்கி,

மீகா 5:12 சூனிய வித்தைகள் உன் கையில் இராதபடிக்கு அகற்றுவேன்; நாள் பார்க்கிறவர்கள் உன்னிடத்தில் இல்லாமற்போவார்கள்.

மீகா 5:13 உன் சுருபங்களையும் உன் சிலைகளையும் உன் நடுவில் இராதபடிக்கு நிர்மூலமாக்குவேன்;உன் கையின் கிரியையை நீ இனிப் பணிந்துகொள்ளாய்.

மீகா 5:14 நான் உன் விக்கிரகத் தோப்புகளை உன் நடுவில் இராதபடிக்குப் பிடுங்கி, உன் பட்டணங்களை அழித்து,

மீகா 5:15 செவிகொடாத புறஜாதிகளிடத்திலே கோபத்தோடும் உக்கிரத்தோடும் நீதியைச் சரிக்கட்டுவேன் என்றார்.

"யாக்கோபிலே மீதியானவர்கள்" - அர்மெகதோனில் கர்த்தர் யுத்தம் பண்ணும் போது, இந்த யுத்தத்தைப் பற்றிய செய்தி புறஜாதியாருக்குப் பயத்தை உண்டாக்கும்.

மீகா - தொகுப்புரை

5 அதிகாரம்

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தாரோடு இருக்கிறார் என்பது உலகம் முழுவதற்கும் தெரியவரும். உலகத்தின் ராஜ்யங்கள் கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவிற்குமுரிய ராஜ்யங்களாகும். (வெளி 11:15). யாக்கோபிலே மீதியானவர்கள், சிங்கம் காட்டு மிருகங்களுக்குள்ளே இருக்கிறதற்குச் சமானமாகவும், கடந்துபோய் மிதித்துத் தப்புவிப்பார் இல்லாமல் பீறிப்போடுகிற பாலசிங்கம் ஆட்டுமந்தைகளுக்குள்ளே இருக்கிற தற்குச் சமானமாகவும் ஜாதிகளுக்குள் அநேக ஜனங்களின் நடுவிலே இருப்பார்கள். (மீகா 5:7-8). அந்நாளில் இஸ்ரவேலின் சத்துருக்களெல்லாரும் சங்கரிக்கப் படுவார்கள். அவர்களுடைய விக்கிரகங்களும், விக்கிரகாராதனை முறைமைகளும் ஒழிக்கப் படும். (மீகா 5:9-15).

"அந்நாளிலே" - அர்மெகதோன் யுத்தத்தின் நாளில். அந்நாளில் தாவீதின் ராஜ்யத்தை மேசியா திரும்பவும் ஸ்தாபிப்பார். (மீகா 4:1-5).

"நான் உன் குதிரைகளை உன் நடுவில் இராதபடிக்குச் சங்கரித்து" - இது யுத்தக் குதிரைகளையும், விக்கிரகாராதனை பட்டணங்களையும் அவர்களுடைய ஆயுதங்களையும் (மீகா 5:11) சூனிய வித்தைகளையும், நாள்பார்க்கிறவர்களையும் (மீகா 5:12), சுரூபங்களையும், அவர்களுடைய விக்கிரகாராதனைகளையும் (மீகா 5:13-15) குறிக்கும். விக்கிரகாராதனை பட்டணங்களெல்லாம் நிர்மூலமாக்கப்பட வேண்டுமென்று மோசேயின் பிரமாணத்தில் கூறப்பட்டிருக்கிறது. (உபா 13).

6 அதிகாரம்

IV. இஸ்ரவேலுக்கு எதிராக கர்த்தருடைய கடந்த கால வழக்கும் நிகழ்கால வழக்கும் - (6:1-7:6)

1. பர்வதங்கள், மலைகள், ஜனங்கள் ஆகியவற்றிற்கு அழைப்பு - (ஏசே 6:2-3; 35:12; 36:1-8; 38:8)

மீகா 6:1 கர்த்தர் சொல்லுகிறதைக் கேளுங்கள்; நீ எழுந்து, பர்வதங்களுக்கு முன் உன் வழக்கைச் சொல்; மலைகள் உன் சத்தத்தைக் கேட்கக்கடவது.

மீகா 6:2 பர்வதங்களே, பூமியின் உறுதியான அஸ்திபாரங்களே, கர்த்தருடைய வழக்கைக் கேளுங்கள்; கர்த்தருக்கு அவர் ஜனத்தோடே வழக்கு இருக்கிறது; இஸ்ரவேலோடே அவர் வழக்காடுவார்.

"அவர் ஜனம்" - கர்த்தருடைய ஜனம். இஸ்ரவேல் புத்திரர். இஸ்ரவேல் தேசத்தின் பத்துக் கோத்திரத்தாரோடு மட்டும் என்றல்லாமல் யூதா கோத்திரத்தாரோடும் கர்த்தர் வழக்காடுகிறார். (மீகா 6:1-2) அவர்களுடைய பாவங்களையும், இதனால் அவர்களுக்கு வரப்போகும் நியாயத் தீர்ப்புகளையும் கர்த்தர் குறிப்பிடுகிறார். (மீகா 6:3-7:6).

2. ஜனங்களோடு வழக்கு - பாவங்களும் நியாயத்தீர்ப்பும்

மீகா 6:3 என் ஜனமே, நான் உனக்கு என்ன செய்தேன்? நான் எதினால் உன்னை விசனப்படுத்தினேன்? எனக்கு எதிரே உத்தரவு சொல்.

மீகா 6:4 நான் உன்னை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி, அடிமைத்தன வீட்டிலிருந்த உன்னை மீட்டுக்கொண்டு, மோசே ஆரோன் மிரியாம் என்பவர்களை உனக்கு முன்பாக அனுப்பினேன்.

மீகா 6:5 என் ஜனமே, மோவாபின் ராஜாவாகிய பாலாக் பண்ணின யோசனை இன்னதென்றும், பேயோரின் குமாரனான பிலேயாம் அவனுக்குப் பிரதியுத்தரமாகச் சொன்னது இன்னதென்றும் , சித்தீம் தொடங்கி கில்கால்மட்டும் நடந்தது இன்னதென்றும், நீ கர்த்தருடைய நீதிகளை அறிந்து கொள்ளும்படி நினைத்துக்கொள்.

மீகா 6:6 என்னத்தைக் கொண்டு நான் கர்த்தருடைய சந்நிதியில் வந்து, உன்னதமான தேவனுக்கு முன்பாகப் பணிந்துகொள்வேன்? தகனபலிகளைக் கொண்டும், ஒரு வயது கன்றுக் குட்டிகளைக் கொண்டும் அவர் சந்நிதியில் வரவேண்டுமோ?

மீகா 6:7 ஆயிரங்களான ஆட்டுக் கடாக்களின் பேரிலும், எண்ணெயாய் ஓடுகிற பதினாயிரங்களான ஆறுகளின் பேரிலும், கர்த்தர் பிரியமாயிருப்பாரோ? என் அக்கிரமத்தைப் போக்க என் முதற்பேறானவனையும், என் ஆத்துமாவின் பாவத்தைப் போக்க என் கர்ப்பக்கனியையும் கொடுக்க வேண்டுமோ?

மீகா 6:8 மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்.

கர்த்தர் தம்மைப் பற்றிக் கூறும் காரியங்கள்

1. நான் உன்னை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணினேன். (மீகா 6:4).
2. அடிமைத்தன வீட்டிலிருந்த உன்னை மீட்டுக்கொண்டேன்.

6 அதிகாரம்

3. மோசே, ஆரோன், மீரியாம் என்பவர்களை உனக்கு முன்பாக அனுப்பினேன்.

4. பிலேயாமின் சாபங்களிலிருந்து உன்னைப் பாதுகாத்தேன். (மீகா 6:5).

5. பாவ நிவாரணத்திற்கு விலையுயர்ந்த பலிகள் தேவையில்லை என்பதை வெளிப்படுத்தினேன். (மீகா 6:6-7).

6. உங்களுடைய அக்கிரமத்தைப் போக்க உங்கள் முதற்பேறானவனையும், உங்கள் ஆத்துமாவின் பாவத்தைப் போக்க உன் கர்ப்பக்கனியையும், கொடுக்க வேண்டுமென்று நான் கேட்கவில்லை.

7 நன்மை இன்னதென்று உனக்கு அறிவித்திருக்கிறேன்.

8. என்னுடைய பிரமாணங்களையும், அதை மீறினால் கொடுக்கப்படும் தண்டனைகளையும் அறிவித்திருக்கிறேன்.

9. குறைவில்லாத மரக்காலையும், சுத்தமுள்ள தராசையும் நான் விரும்புகிறேன். (மீகா 6:10-15).

10. என் கட்டளைக்குக் கீழ்ப்படிவதற்குப் பதிலாக உம்ரியின் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறீர்கள். (மீகா 6:16).

"மீரியாம்" (நுண்ழ்ண்ஹம்) - இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வந்தபோது கர்த்தர் அவர்களுக்கு நியமித்த மூன்று முக்கியமான தலைவர்களில் மீரியாமையும் ஒரு தலைவராகக் கர்த்தர் அங்கிகரித்திருக்கிறார். (யாத் 15:20-21; எண் 12:4,10,15; எண் 20:1; எண் 26:59; 1நாளா 6:3).

கர்த்தர் மனுஷரிடத்தில் கேட்காத காரியங்கள்

1. உன்னதமான தேவனுக்கு முன்பாகப் பணிந்துகொள்வது. (மீகா 6:6).

2. தகனபலிகளைக் கொண்டுவருவது.

3. ஆயிரங்களான ஆட்டுக்கடாக்களைக் கொண்டுவருவது. (மீகா 6:7).

4. எண்ணெயாய் ஓடுகிற பதினாயிரங்களான ஆறுகளைக் கொண்டுவருவது.

5. அக்கிரமத்தைப் போக்க முதற்பேறானவனைக் கொண்டு வருவது.

6. ஆத்துமாவின் பாவத்தைப்போக்க கர்ப்பக்கனியைக் கொடுப்பது.

கர்த்தர் மனுஷரிடத்தில் கேட்கும் காரியங்கள்

1. நியாயஞ்செய்ய வேண்டும். (மீகா 6:8)

2. இரக்கத்தைச் சிநேகிக்க வேண்டும்.

3. தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடக்க வேண்டும்.

3. பட்டணத்தோடு வழக்கு - பாவங்களும் நியாயத்தீர்ப்பும்

மீகா 6:9 கர்த்தருடைய சத்தம் நகரத்தை நோக்கிக் கூப்பிடுகிறது; ஞானமுள்ளவன் உம்முடைய நாமத்தை மதிப்பான்; மிலாற்றிற்கும் அதை நேமித்தவருக்கும் செவிகொடுங்கள்.

மீகா 6:10 துன்மார்க்கனுடைய வீட்டிலே துன்மார்க்கத்தினால் சம்பாதித்த பொக்கிஷங்களும் அருவருக்கப்படத்தக்க குறைந்த மரக்காலும் இன்னும் இருக்கிறதல்லவோ?

மீகா 6:11 கள்ளத்தராசும் கள்ளப் படிக்கற்களுள்ள பையும் இருக்கும் போது, அவர்களைச் சுத்தமுள்ளவர்களென்று எண்ணுவேனோ?

மீகா – தொகுப்புரை

6 அதிகாரம்

மீகா 6:12 அவர்களில் ஐசுவரியமுள்ளவர்கள் கொடுமையால் நிறைந்திருக்கிறார்கள்; அவர்களுக்குள் வாசமாயிருக்கிறவர்கள் பொய் பேசுகிறார்கள்; அவர்கள் வாயிலுள்ள நாவு கபடமுள்ளது.

மீகா 6:13 ஆகையால் நான் உன் பாவங்களினிமித்தம் உன்னை அடித்துப் பாழாக்குகிறதினால் உன்னை பலட்சயமாக்குவேன்.

மீகா 6:14 நீ புசித்தும் திருப்தி அடையாதிருப்பாய்; உனக்குள்ளே சோர்வுண்டாகும்; நீ பதனம் பண்ணியும் தப்புவிப்பதில்லை; நீ தப்புவிப்பதையும் பட்டயத்துக்கு ஒப்புக்கொடுப்பேன்.

மீகா 6:15 நீ விதைத்தும் அறுக்காமற் போவாய்; நீ ஒலிவப்பழங்களையும் திராட்சப்பழங்களையும் ஆலையாடின போதிலும், எண்ணெய் பூசிக் கொள்வதுமில்லை, இரசம் குடிப்பதுமில்லை.

மீகா 6:16 நான் உன்னைப் பாழாகவும் உன் குடிகளை ஈசலிட்டு நிந்திக்கிற நிந்தையாகவும் வைக்கும்படி, உம்ரியினுடைய கட்டளைகளும் ஆகாப் வீட்டாருடைய எல்லாச் செய்கைகளும் கைக்கொள்ளப்பட்டு வருகிறது; அவர்களுடைய ஆலோசனைகளிலே நடக்கிறீர்கள்; ஆகையால் என் ஜனத்தின் நிந்தையைச் சுமப்பீர்கள்.

இஸ்ரவேலின் பாவங்கள்

1. துன்மார்க்கத்தினால் சம்பாதித்த பொக்கிஷங்கள். (மீகா 6:9)
2. அருவருக்கப்படத்தக்க குறைந்த மரக்கால் (மீகா 6:10)
3. கள்ளத்தராசு (மீகா 6:11)
4. கள்ளப்படிக்கற்கள்
5. கொடுமை (மீகா 6:12)
6. பொய்
7. கபடம்
8. உம்ரியினுடைய கட்டளைகளைக் கைக்கொள்வது. (மீகா 6:16)
9. ஆகாபின் செய்கைகளைக் கைக்கொள்வது.
10. ஆகாப் வீட்டாரின் ஆலோசனைகளில் நடப்பது.

தீர்க்கதரிசன எண் - 9

"ஆகையால் நான் உன் பாவங்களினிமித்தம்....." (மீகா 6:13-16) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. நான் உன் பாவங்களினிமித்தம் உன்னை அடித்துப் பாழாக்குகிறதினால் உன்னை பலட்சயமாக்குவேன். (மீகா 6:13).
2. நீ புசித்தும் திருப்தியடையாதிருப்பாய் (மீகா 6:14).
3. உனக்குள்ளே சோர்வுண்டாகும்.
4. நீ பதனம் பண்ணியும் தப்புவிப்பதில்லை. உன் வியாபாரம் விருத்தியாகாது.
5. நீ தப்புவிப்பதையும் பட்டயத்துக்கு ஒப்புக்கொடுப்பேன்.
6. நீ விதைத்தும் அறுக்காமற்போவாய்; (மீகா 6:15).
7. என் ஜனத்தின் நிந்தையைச் சுமப்பீர்கள். (மீகா 6:16).

மீகா - தொகுப்புரை

6 அதிகாரம்

பாவத்திற்கு நியாயத்தீர்ப்பு

1. வியாதி (மீகா 6:13)
2. அழிவு
3. ஒவ்வின்மை (மீகா 6:14)
4. யுத்தம்
5. சோர்வு
6. வியாபாரத்தில் தோல்வி
7. விளைச்சலின்மை (மீகா 6:15)
8. நிந்தை (மீகா 6:16)

"உம்ரியினுடைய கட்டளைகள்" - (1இராஜா 16:25-34; 1இராஜா 21:25-26)

7 அதிகாரம்

4. இஸ்ரவேல் முழுமையாக நீதியிலிருந்து பாழாகும்

மீகா 7:1 ஐயோ! உஷ்ணகாலத்துக் கனிகளைச் சேர்த்து, திராட்சப் பழங்களைஅறுத்த பின்பு வருகிறவனைப் போல் இருக்கிறேன்; புசிக்கிறதற்கு ஒரு திராட்சக்குலையும் என் ஆத்துமா இச்சித்த முதல் அறுப்பின் கனியும் இல்லை.

மீகா 7:2 தேசத்தில் பக்தியுள்ளவன் அற்றுப்போனான்; மனுஷரில் செம்மையானவன் இல்லை; அவர்களெல்லாரும் இரத்தஞ்சிந்தப் பதிவிருக்கிறார்கள்; அவனவன் தன்தன் சகோதரனை வலையிலே பிடிக்க வேட்டையாடுகிறான்.

மீகா 7:3 பொல்லாப்புச் செய்ய அவர்கள் இரண்டு கைகளும் நன்றாய்க் கூடும்; அதிபதி கொடு என்கிறான்; நியாயாதிபதி கைக்கூலி கேட்கிறான்; பெரியவன் தன் துராசையைத் தெரிவிக்கிறான்; இவ்விதமாய்ப் புரட்டுகிறார்கள்.

மீகா 7:4 அவர்களில் நல்லவன் முட்செடிக் கொத்தவன், செம்மையானவன் நெரிஞ்சிலைப் பார்க்கக் கடுங்கூர்மையானவன்; உன் காவற்காரர் அறிவித்த உன் தண்டனையின் நாள் வருகிறது; இப்பொழுதே அவர்களுக்குக் கலக்கம் உண்டு.

மீகா 7:5 சிநேகிதனை விசுவாசிக்க வேண்டாம், வழிகாட்டியை நம்பவேண்டாம்; உன் மடியிலே படுத்துக் கொள்ளுகிறவளுக்கு முன்பாக உன் வாயைத் திறவாமல் எச்சரிக்கையாயிரு.

மீகா 7:6 மகன் தகப்பனைக் கனவீனப்படுத்துகிறான்; மகள் தன் தாய்க்கு விரோதமாகவும், மருமகள் தன் மாமிக்கு விரோதமாகவும் எழும்புகிறார்கள்; மனுஷனுடைய சத்துருக்கள் அவன் வீட்டார்தானே.

இஸ்ரவேலின் நிலைமை

1. உஷ்ணகாலத்துக் கனிகளைப் போலிருக்கிறது. இவை விரைவில் பாழாய்ப்போகும். (மீகா 7:1).
2. திராட்ரசப் பழங்களைஅறுத்தபின்பு வருகிறதைப் போலிருக்கிறது. கொஞ்சம் மட்டுமே மீதியாக இருக்கும். இவை புசிப்புக்கு ஏற்றதல்ல.
3. தேசத்தில் பக்தியுள்ளவன் அற்றுப் போனான் (மீகா 7:2).
4. மனுஷரில் செம்மையானவன் இல்லை.
5. அவர்களெல்லாரும் இரத்தஞ்சிந்தப் பதிவிருக்கிறார்கள்.
6. அவனவன் தன்தன் சகோதரனை வலையிலே பிடிக்க வேட்டையாடுகிறான்.
7. பொல்லாப்புச் செய்ய அவர்கள் இரண்டு கைகளும் நன்றாய்க் கூடும் (மீகா 7:3).
8. அதிபதி பரிதானம் கேட்கிறான். நியாயாதிபதி கைக்கூலி கேட்கிறான்.
9. பெரியவன் தன் துராசையைத் தெரிவிக்கிறான்.
10. அவர்களில் நல்லவன் முட்செடிக் கொத்தவன் (மீகா 7:4).
11. செம்மையானவன் நெரிஞ்சிலைப் பார்க்கக் கடுங்கூர்மையானவன்.
12. கணவனுக்கும், மனைவிக்கும் இடையே மெய்யான நேசமில்லை.
13. மகன் தகப்பனைக் கனவீனப் படுத்துகிறான் (மீகா 7:6).
14. மகள் தன் தாய்க்கு விரோதமாக எழும்புகிறாள்.
15. மருமகள் தன் மாமிக்கு விரோதமாக எழும்புகிறாள்.
16. மனுஷனுடைய சத்துருக்கள் அவன் வீட்டார்தானே.

மீகா – தொகுப்புரை

7 அதிகாரம்

V. இஸ்ரவேலின் மீட்பு - (7:7-20)

1. கடைசி நாட்களில் இஸ்ரவேலின் மனந்திரும்புதல் - (சக 12:10)

மீகா 7:7 நானோவென்றால் கர்த்தரை நோக்கிக்கொண்டு, என் இரட்சிப்பின் தேவனுக்குக் காத்திருப்பேன்; என் தேவன் என்னைக் கேட்டருளுவார்.

மீகா 7:8 என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்தோஷப்படாதே; நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன்; நான் இருளிலே உட்கார்ந்தால், கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார்.

மீகா 7:9 நான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன்; அவர் எனக்காக வழக்காடி என் நியாயத்தை விசாரிக்கு மட்டும் அவருடைய கோபத்தைச் சுமப்பேன்; அவர் என்னை வெளிச்சத்திலே கொண்டுவருவார், அவருடைய நீதியைப் பார்ப்பேன்.

தீர்க்கதரிசன எண் - 10

"நானோவென்றால் கர்த்தரை நோக்கிக்கொண்டு......." (மீகா 7:7-20) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. அவர் என்னை வெளிச்சத்திலே கொண்டு வருவார் (மீகா 7:9).
2. அவருடைய நீதியைப் பார்ப்பேன்.
3. சத்துருவானவள் அதைப் பார்க்கும்போது வெட்கம் அவளை மூடும் (மீகா 7:10).
4. என் கண்கள் அவளைக் காணும். இனி வீதிகளின் சேற்றைப்போல மிதிக்கப் படுவாள்
5. உன் மதில்களை எடுப்பிக்கும் நாள் வருகிறது; அந்நாளிலே பிரமாணம் வெகுதூரம் பரவிப்போம். (மீகா 7:11).
6. அந்நாளிலே அசீரியாமுதல் எகிப்தின் பட்டணங்கள் வரைக்கும், எகிப்து முதல் நதிவரைக்கும், ஒரு சமுத்திரமுதல் மறு சமுத்திரம்வரைக்கும், ஒரு பர்வதமுதல் மறு பர்வதம்வரைக்குமுள்ள ஜனங்கள் உன்னிடத்திற்கு வருவார்கள். (மீகா 7:12).
7. தன் குடிகளினிமித்தமும் அவர்கள் கிரியைகளுடைய பலன்களினிமித்தமும் தேசம் பாழாயிருக்கும். (மீகா 7:13).
8. நீ எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளில் நடந்ததுபோலவே உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன். (மீகா 7:15).
9. புறஜாதிகள் கண்டு தங்களுடைய எல்லாப் பராக்கிரமத்தையுங்குறித்து வெட்கப் படுவார்கள் (மீகா 7:16).
10. கையை வாயின்மேல் வைத்துக் கொள்வார்கள்; அவர்கள் காதுகள் செவிடாய்ப் போகும்.
11. பாம்பைப் போல மண்ணை நக்குவார்கள்;(மீகா 7:17).
12. பூமியின் ஊர்வனவற்றைப்போலத் தங்கள் மறைவிடங்களிலிருந்து நடுநடுங்கிப் புறப்படுவார்கள்.
13. நமது தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திகிலோடே சேர்ந்து, உனக்குப் பயப்படுவார்கள்.
14. அவர் நம்மேல் திரும்புவார். (மீகா 7:19).
15. அவர் நம்மேல் இரங்குவார்.
16. நம்முடைய அக்கிரமங்களை அடக்குவார்.
17. நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டு விடுவார்.
18. தேவரீர் பூர்வநாட்கள் முதல் எங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட சத்தியத்தை யாக்கோபுக்கும், கிருபையை ஆபிரகாமுக்கும் கட்டளையிடுவார். (மீகா 7:20).

7 அதிகாரம்

கடைசி நாட்களில் இஸ்ரவேலின் மனந்திரும்புதல்

1. கர்த்தரை நோக்குவேன். (மீகா 7:7).
2. என் இரட்சிப்பின் தேவனுக்குக் காத்திருப்பேன்.
3. என் தேவன் என்னைக் கேட்டருளுவார்.
4. என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்தோஷப்படாதே (மீகா 7:8)
5. நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன்.
6. நான் இருளிலே உட்கார்ந்தால், கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார்.
7. நான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன். அவருடைய கோபத்தைச் சுமப்பேன் (மீகா 7:9).
8. அவர் எனக்காக வழக்காடி என் நியாயத்தை விசாரிக்குமட்டும் அவருடைய கோபத்தைச் சுமப்பேன்.
9. அவர் என்னை வெளிச்சத்திலே கொண்டுவருவார்.
10. அவருடைய நீதியைப் பார்ப்பேன்.

2. இஸ்ரவேலின் விரோதிகள் தாழ்த்தப்படுவார்கள்

மீகா 7:10 உன் தேவனாகிய கர்த்தர் எங்கே என்று என்னோடே சொல்லுகிற என் சத்துருவானவள் அதைப் பார்க்கும் போது வெட்கம் அவளை மூடும்; என் கண்கள் அவளைக் காணும்; இனி வீதிகளின் சேற்றைப்போல மிதிக்கப் படுவாள்.

“என் சத்துருவானவள் அதைப் பார்க்கும் போது” - இஸ்ரவேல் தேசம் மனந்திருந்தி, மறுபடியும் ஒரு தேசமாக ஸ்தாபிக்கப்படும் போது, இஸ்ரவேலின் சத்துருக்கள் இஸ்ரவேலைப் பார்த்து வெட்கப்படுவார்கள்.

3. இஸ்ரவேல் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படும்

மீகா 7:11 உன் மதில்களை எடுப்பிக்கும் நாள் வருகிறது; அந்நாளிலே பிரமாணம் வெகுதூரம் பரவிப்போம்.

மீகா 7:12 அந்நாளிலே அசீரியாமுதல் எகிப்தின் பட்டணங்கள் வரைக்கும், எகிப்து முதல் நதிவரைக்கும், ஒரு சமுத்திரமுதல் மறு சமுத்திரம் வரைக்கும், ஒரு பர்வதமுதல் மறு பர்வதம் வரைக்குமுள்ள ஜனங்கள் உன்னிடத்திற்கு வருவார்கள்.

மீகா 7:13 ஆனாலும் தன் குடிகளினிமித்தமும் அவர்கள் கிரியைகளுடைய பலன்களினிமித்தமும் தேசம் பாழாயிருக்கும்.

“உன் மதில்களை எடுப்பிக்கும் நாள் வருகிறது” - மீகா 7:11-13 ஆகிய வசனங்களில் இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப் படுவதைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. அவர்கள் எல்லா தேசங்களிலிருந்தும் தங்கள் சொந்த தேசத்திற்கு ஒவ்வொருவராகக் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். அவர்கள் மேசியாவின்கீழ் நித்திய காலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள். (ஏசா 11:10-12)

“பிரமாணம்” (decree) - இஸ்ரவேல் புத்திரரின் சிறையிருப்பைப் பற்றிய ஆணை.

“அவர்கள் கிரியைகளுடைய பலன்களினிமித்தமும்” - ஒரு தேசத்திலுள்ள ஜனங்கள் நன்மை செய்யும்போது அந்தத் தேசம் செழித்திருக்கும். அவர்கள் பாவம் செய்யும் போது அந்தத் தேசம் சபிக்கப்படும். (லேவி 26, உபா 28). புறஜாதியாரின் கிரியைகளுடைய பலன்களின் நிமித்தம் அவர்களுடைய தேசம் பாழாய்ப்போயிருக்கும். அவர்களுடைய பாவங்களின் நிமித்தம் தேவனுடைய சாபம் அவர்கள்மீது வரும்.

“தேசம் பாழாயிருக்கும்” - அர்மெகதோன் யுத்தத்தில் ஏராளமானோர் கொல்லப் பட்டிருப்பார்கள். மரித்தோரின் பிரேதங்களை அடக்கம்பண்ணுவதற்கு ஏழு மாதங்களாகும். (எசே 39:8-16).

7 அதிகாரம்

4. தேவனிடம் ஜெபம்

மீகா 7:14 கர்மேலின் நடுவிலே தனித்து வனவாசமாயிருக்கிற உமது சுதந்தரமான மந்தையாகிய உம்முடைய ஜனத்தை உமது கோலினால் மேய்த்தருளும்; பூர்வநாட்களில் மேய்ந்தது போலவே அவர்கள் பாசானிலும் கீலேயாத்திலும் மேய்வார்களாக.

"பூர்வநாட்களில் மேய்ந்ததுபோலவே அவர்கள் பாசானிலும் கீலேயாத்திலும் மேய்வார்களாக" - இஸ்ரவேல் தேசத்திற்காக மீகா ஜெபிக்கிறார். இஸ்ரவேல் புத்திரரின் மேய்ப்பராக இருந்து அவர்களை ஆளுகை செய்ய வேண்டுமென்று மீகா விண்ணப்பம் பண்ணுகிறார். பூர்வ நாட்களில் கர்த்தர் அவர்களை ஆதரித்ததுபோலவே இனிமேலும் இஸ்ரவேல் புத்திரரை ஆதரிக்க வேண்டுமென்று மீகா ஜெபிக்கிறார்.

5. விரோதிகள்மீது நியாயத்தீர்ப்பு

மீகா 7:15 நீ எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டநாளில் நடந்ததுபோலவே உன்னை அதிசயங்களைக் காணப் பண்ணுவேன்.

மீகா 7:16 புறஜாதிகள் கண்டு தங்களுடைய எல்லாப் பராக்கிரமத்தையுங் குறித்து வெட்கப்படுவார்கள்; கையை வாயின்மேல் வைத்துக்கொள்வார்கள்; அவர்கள் காதுகள் செவிடாய்ப் போகும்.

மீகா 7:17 பாம்பைப்போல மண்ணை நக்குவார்கள்; பூமியின் ஊர்வனவற்றைப் போலத் தங்கள் மறைவிடங்களிலிருந்து நடுநடுங்கிப் புறப்படுவார்கள்; நமது தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திகிலோடே சேர்ந்து, உனக்குப் பயப்படுவார்கள்.

"உன்னை அதிசயங்களைக் காணப் பண்ணுவேன்" - மீகாவின் ஜெபத்திற்கு (மீகா 7:14) கர்த்தர் பதில் கூறுகிறார் (மீகா 7:15-17). இஸ்ரவேலின் சத்துருக்கள் முழுவதுமாகத் தோற்றுப் போவார்கள். (மீகா 7:17; சங் 72:9; ஏசா 49:23)

"பூமியின் ஊர்வனவற்றைப்போலத் தங்கள் மறைவிடங்களிலிருந்து நடுநடுங்கிப் புறப்படுவார்கள்" - கர்த்தருடைய நாளில் ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து குகைகளிலும், குழிகளிலும் தங்களை ஒளித்துக் கொள்வார்கள் என்று ஏசாயா முன்னறிவித்திருக்கிறார். இஸ்ரவேலை உபத்திரவப் படுத்தியதற்காகவும், புறஜாதியாருடைய பாவங்களுக்காகவும் அவர்களை நியாயந்தீர்ப்பதற்காக கர்த்தர் வருவார். (ஏசா 2:12-21) கடைசி நாளில் பூமி மிகவும் அதிரும். அப்போது பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு, பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள் என்று கூறுவார்கள். (வெளி 6:12-17) இந்தச் சம்பவம் கர்த்தருடைய நாளுக்குப் பல வருஷங்களுக்கு முன்பு நடைபெறும். தானியேலின் எழுபதாவது வருஷத்தில் உண்டாகும் வருங்கால உபத்திரவக் காலத்தில் இந்தச் சம்பவம் நடைபெறும். இக்காலத்தில் வெளி 6:1-19:21 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் சம்பவங்கள் நிறைவேறும். ஏசா 2:12-21 ஆகிய வசனங்களைப் போலவே மீகா 7:17 ஆவது வசனமும் கர்த்தருடைய நாளைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

6. தேவனிடத்தில் இஸ்ரவேலின் நம்பிக்கை

மீகா 7:18 தமது சுதந்தரத்தில் மீதியானவர்களுடைய அக்கிரமத்தைப் பொறுத்து, மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்? அவர் கிருபைசெய்ய விரும்புகிற படியால் அவர் என்றென்றைக்கும் கோபம் வையார்.

மீகா – தொகுப்புரை

7 அதிகாரம்

மீகா 7:19 அவர் திரும்ப நம்மேல் இரங்குவார்; நம்முடைய அக்கிரமங்களை அடக்கி, நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார்.

மீகா 7:20 தேவரீர் பூர்வநாட்கள் முதல் எங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட சத்தியத்தை யாக்கோபுக்கும், கிருபையை ஆபிரகாமுக்கும் கட்டளையிடுவீராக.

"தமது சுதந்தரத்தில் மீதியானவர்களுடைய அக்கிரமத்தைப் பொறுத்து" - இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைத்து, தங்களுடைய விசுவாசத்தைப் புதுப்பித்துக் கொள்வார்கள். இக்காலத்தில் அவர்கள் கர்த்தர் எப்படிப்பட்டவர் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

கர்த்தரைப் பற்றிய சத்தியம்

1. கர்த்தருக்கு ஒப்பான தேவன் ஒருவருமில்லை. (மீகா 7:18).
2. மீறுதலை மன்னிக்கிறவர்.
3. அக்கிரமத்தைப் பொறுத்துக் கொள்கிறவர்.
4. கிருபைசெய்ய விரும்புகிறவர்.
5. என்றென்றைக்கும் கோபம் வையாதவர்.
6. தம்மிடத்தில் திரும்பி அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குக் கர்த்தர் திரும்பவும் இரங்குகிறவர். (மீகா 7:19).
7. மனந்திரும்புகிறவர்கள்மீது இரக்கமாய் இருக்கிறவர்.
8. மனுஷருடைய அக்கிரமங்களை அடக்கி பாவங்களை மன்னிக்கிறவர்.
9. அறிக்கை செய்யப்பட்ட பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுகிறவர்.
10. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருக்குக் கட்டளையிட்ட சத்தியத்தையும் கிருபையையும் நிறைவேற்றுகிறவர். (மீகா 7:20).

"நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார்." - பாவம் செய்தவன் மனந்திருந்தி, தன்னுடைய பாவங்களைக் கர்த்தரிடத்தில் அறிக்கையிட்டால், கர்த்தர் அவன் செய்த பாவங்களை மறந்து விடுவார். அதை மறுபடியும் நினைத்து பார்க்கமாட்டார்.

"எங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட சத்தியத்தை" - இந்த வாக்கியம் லூக்கா 1:72-73 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டுள்ளது. (ஆதி 12:1-3; ஆதி 26:24; ஆதி 28:13-15)

மீகா - தொகுப்புரை

7 அதிகாரம்

புத்தகத்தலைப்பின் முக்கியத்துவம்

இந்த புத்தகத்தின் ஆசிரியரான மீகாவின் பெயரே இந்தபுத்தகத்திற்குக் கொடுக்கப் பட்டுள்ளது.

மிகச் சிறிய அதிகாரம்: 3 (12 வசனங்கள்)

மிக நீண்ட அதிகாரம்: 7 (20 வசனங்கள்)

மொத்த அதிகாரங்கள்: 7

மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனம்: மீகா 5:2

முக்கிய வேதவசனம்

"மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்." (மீகா 6:8)

முன்னுரை

ஏசாயா, ஆமோஸ் ஆகியவர்கள் ஊழியம் செய்த நாட்களில் மீகா வாழ்ந்தார். மீகா சமாரியாவையும், யூதாவையும் பற்றி தீர்க்கதரிசனம் உரைத்தார். மீகா மொரேசா ஊரைச் சேர்ந்தவர். இந்த ஊர் யூதேயாவில் இருந்தது. ஏசாயாவின் பிறந்த ஊரும் இதுதான். எரேமியா 26:18-19-இல் எருசலேமின் வீழ்ச்சியைப்பற்றி தீர்க்கதரிசனமாகக் கூறியபோது, இவர் கூறிப்பிடப்பட்டிருக்கிறார். மேசியாவின் வருகையைப் பற்றி இவர் கூறிய தீர்க்கதரிசனம் மிகவும் முக்கியமானது ஆகும் (மீகா 5:2).

புத்தகத்தின் பொதுவான சுருக்க வருணனை

1. அவர்களுடைய விக்கிரக வழிபாட்டின் நிமித்தமாக கர்த்தரின் கடுங்கோபமானது சமாரியா மேலும், யூதாவின் மேலும் கடந்து வந்தது. (அதிகாரம் 1)
2. கள்ளத் தீர்க்கதரிசிகளும் மீட்பைப் பற்றிய வாக்குத்தத்தமும் (அதிகாரம் 2)
3. பிரபுக்கள், நியாயாதிபதிகள், ஆசாரியர்கள், தீர்க்கதரிசிகள் ஆகியோரின் அநீதிக்கேடுகள் (அதிகாரம் 3)
4. கடைசி நாட்கள் (அதிகாரம் 4)
5. அசீரியர்களிடமிருந்தும் விக்கிரக வழிபாட்டிலிருந்தும் விடுவிக்கப்படுதல் (அதிகாரம் 5)
6. தேவன் தமது ஜனங்களைக் குற்றப்படுத்திக் கூறும் வார்த்தைகள் (அதிகாரம் 6)
7. தேவனுடைய இரக்கத்திற்காகவும் மனதுருக்கத்திற்காகவும் தேவனிடம் விண்ணப்பம் பண்ணுவதும் அவரைத் துதிப்பதும் (அதிகாரம் 7)